வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P .1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

வார மலர்








Email : news@eelanadu.lk | மலர் : 05 | 16.06.2024 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 168 | பக்கங்கள் : 16


# தேர்தல் கால பிரசாரமாக 13ஆவது திருத்தச் சட்டம்

## அதனை தவிர்க்க கோருகிறார் நாமல் எம்.பி.

கொழும்பு, ஜூன் 16

**தேர்தல்கால பிரசாரமாக அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை பயன்படுத்துவதை அரசியல் தரப்பினர் தவிர்த்துக்கொள்ள வேண்டும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களுக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே ஜனநாயக ரீதியில் அரசியல் உரிமையை வழங்கினார் என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**



கொழும்பில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் தற்போதைய பிரதான பேசு பொருளாக காணப்படுகிறது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க ஆகியோர் வடக்குக்கு சென்று

15

# நாணய நிதியத்தின் மற்றொரு நிபந்தனை

கொழும்பு, ஜூன் 16

இலங்கையில் அரசாங்க வருவாயை அதிகரிப்பதற்கான ஒரு நடவடிக்கையாக, 2025 ஏப்ரல் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் வாடகை வீடு மற்றும் காலியாக உள்ள குடியிருப்பு சொத்துக்களுக்கு வாடகை வருமான வரி ஒன்றை அறிமுகப்படுத்த சர்வதேச நாணய நிதியம் முன்மொழிந்துள்ளது.

சர்வதேச நாணய நிதியம் இலங்கை தொடர்பில் வெளியிட்டுள்ள சமீபத்திய விரிவான

15

தரமற்ற மருந்து இறக்குமதி:

# தப்பியோடிய வைத்தியருக்கு சர்வதேச பொலிஸார் வலை!

கொழும்பு, ஜூன் 16

இம்யூனோகுளோபுலின் வழக்கில் தேடப்படும் சுகாதார அமைச்சின் முன்னாள் அதிகாரியான வைத்திய நிபுணர் ஜயநாத் புத்பிட்டியவை கைது செய்வதற்கான நடவடிக்கையை சர்வதேச பொலிஸார் முன்னெடுத்துள்ளதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம மாளிகாகந்தை நீதவான் லோச்சனி

15

# பூநகரி, மன்னார் காற்றாலைகளுக்கு அனுமதி மறுத்துள்ள ஆணைக்குழு!

கொழும்பு, ஜூன் 16

இந்தியாவின் அதானி நிறுவனத்தினால் முன்மொழியப்பட்டுள்ள மன்னார் மற்றும் பூநகரி ஆகிய 2 காற்றாலை மின்னுற்பத்தி திட்டங்களுக்கும் தற்போது அனுமதி வழங்க முடியாது என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இந்த திட்டத்திற்கான மதிப்பீடு மற்றும் அவற்றின் ஊடாக சூழலுக்கு ஏற்படக் கூடிய தாக்கம் தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வழங்கப்பட்ட உரிமத்தின் விவரங்கள் உள்ளிட்டவற்றின் மேலதிகத் தகவல்களை சமர்ப்பிக்குமாறு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தியாவின் அதானி நிறுவனத்தினால் முன்மொழியப்பட்டுள்ள பூநகரி மற்றும் மன்னார் காற்றாலை

15

# ஐ. எம். எவ். - அரசு இடையே மக்களை அழிக்கும் ஒப்பந்தம்

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் சாடல்

கம்பஹா, ஜூன் 16

நாட்டு மக்களைக் காப்பாற்றுவதை விடுத்து, மக்களை அழிக்கும் இணக்கப்பாட்டைக் கொண்டதே இந்த அரசாங்கம் ஐ. எம். எவ். உடன் செய்து கொண்ட ஒப்பந்தமாகும் என்றும் சர்வதேச நாணய நிதியமின்றி நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்று கூறும் முட்டாள் தலைவர்களும் எமது நாட்டில் உள்ளனர் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கடுமையாகச் சாடியுள்ளார்.

15



# இந்த மாத இறுதியில் வருகிறார் ஜெய்சங்கர்

கொழும்பு, ஜூன் 16

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இம்மாத இறுதியில் இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொள்ள உள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இலங்கை வரவுள்ள நிலையில் அவரது வருகைக்கு முன்னதாக எஸ்.ஜெய்சங்கரின் இந்த பயணமானது முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

இரு நாடுகளுக்கு இடையே நடைபெற்றுவரும் அபிவிருத்தி திட்டங்களை ஆய்வு செய்வதற்காக

15

# வெடிக்காத குண்டுகள் ஆனையிறவில் மீட்பு!

கிளிநொச்சி, ஜூன் 16

கிளிநொச்சி - ஆனையிறவு உப்பளம் அமைந்துள்ள பகுதியில் வெடிக்காத நிலையில் ஆர்.பி.ஜி. குண்டுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. குறித்த பகுதியில் இவ்வாறு 4 குண்டுகள் காணப்படு வது தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து

15



# மொட்டு கட்சியின் ஆதரவு ரணிலுக்கு?

கொழும்பு, ஜூன் 16

ஜனாதிபதி தேர்தலின்போது பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவு ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிடைக்கப்பெறக்கூடும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அத்துடன், வடக்கு, கிழக்கு மக்களின்

15

# யாழ். கோட்டையை சுற்றி போராளிகளுக்கு சிலைகள்

## அமைச்சர் டக்ளஸ் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்த இயக்கங்களின் தலைவர்கள் தமிழ் தலை வர்கள் மட்டுமல்லாது பொதுமக்களுக்கும் போராளிகளுக்கும் அவர்களின் வரலாற்றை அடுத்த தலை முறைக்கு எடுத்துச்

15



# தீபச்செல்வனிடம் மீண்டும் விசாரணை

கொழும்பு, ஜூன் 16

எழுத்தாளர் தீபச்செல்வனை மீண்டும் விசாரணைக்கு வருமாறு பயங்கரவாத தடுப்புப் பிரிவு எழுத்துமூல அழைப்பு விடுத்துள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு வருமாறு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு அழைத்துள்ளதாக தீபச்செல்வன் குறிப்பிட்டார்.

ஈழத்தின் மூத்த எழுத்தாளரின் புத்தக வெளியீட்டை நடத்தியமைக்காக கடந்த ஏப்ரல் 11ஆம் திகதி தீவிர விசாரணைக்கு தாம் உட்படுத்தப்பட்டிருந்த நிலையில் மீண்டும் இவ்வாறு விசாரணைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

# உயிர் காக்கும் மருந்துகள் தட்டுப்பாடின்றி வழங்கப்படும்

## சுகாதார அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 16


850 அத்தியாவசிய மருந்துகளில் சில மருந்துகளைத் தவிர அனைத்து உயிர்காக்கும் மருந்துகளும் தட்டுப்பாடின்றி பராமரிக்கப்படுவதாக சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

எல்பிட்டியவில் நேற்று இடம்பெற்ற நடமாடும் சுகாதார வைத்திய நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

மருந்துப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தேசிய கொள்வனவு முறைமைக்கு அமைவாக உயர்தர மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டு தட்டுப்பாடின்றி மக்களுக்கு வழங்கப்படும் எனவும் அவர் கூறினார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெருக்கடி நிலையை கண்டு தப்பியோடவில்லை ரணில்

## இராஜாங்க அமைச்சர் அசோக்க பிரியந்த

சிலாபம், ஜூன் 16

நாடு நெருக்கடி நிலையை எதிர்கொண்டபோது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தப்பியோடவில்லை என உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக்க பிரியந்த தெரிவித்தார்.

புத்தளத்தின் ஒரேயொரு பௌத்த பாடசாலையான பாலிகா தேசிய கல்லூரிக்கு பற்றாக்குறையாக காணப்பட்ட கட்டடத்தை நிர்மாணித்துக் தந்தமைக்காக நன்றி தெரிவிக்கிறேன். மக்கள் பிரதிநிதி என்ற வகையில் இந்த பாடசாலைக்கு உதவ முடிந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

சிலாபம், கிரிமெட்டியான பௌத்த மகளிர் தேசிய பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் மூன்று மாடிக் கட்டடத்தின் முதற்கட்டக் கட்டடத்தை நேற்று முன்தினம் பிற்பகல் மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

நாடு நெருக்கடி நிலையை எதிர்கொண்டபோது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தப்பியோடவில்லை. அவநம்பிக்கையுடன் இருந்த மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறார். அதற்காக புத்தளம் மக்கள் சார்பில் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

அன்று கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட தீர்மானங்கள் இன்றும் நாட்டின் கல்வியைப் பலப்படுத்த சாதகமான காரணமாக மாறியுள்ளது. அதனால் தற்போதைய அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்தத் திட்டம் தொடர்ச்சியாகக் கொண்டு செல்லப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் உள்ளது. அந்த வேலைத்திட்டத்தை கைவிட்டால் மீண்டும் நெருக்கடிக்குள் சிக்கிக்கொள்ள நேரிடும் - என்றார். (எ)

# செயற்கை நுண்ணறிவு கல்விக்காக பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்படும்

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

சிலாபம், ஜூன் 16

**செயற்கை நுண்ணறிவு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துடன் கல்வியைப் பலப்படுத்துவோம். அதற்கென தனியானதொரு பல்கலைக்கழகமும் ஆரம்பிக்கப்படும். இதன் மூலம் கல்வியை சர்வதேச மயப்படுத்த முடியும் - இவ்வாறு கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.**



சிலாபம், கிரிமெட்டியான பௌத்த மகளிர் தேசிய பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் மூன்று மாடிக் கட்டடத்தின் முதற்கட்டக் கட்டடத்தை நேற்று முன்தினம் பிற்பகல் மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தொழில்நுட்பப் பாடத்துக்கான ஆய்வகத்தை பெற்றுக் கொடுப்பதற்கான அமைச்சரவை அனுமதி அடுத்த வாரத்துக்குள் கிடைக்குமென இப் பாடசாலை அதிபருக்கு உறுதியளித்தேன். தொழில்நுட்ப ஆய்வகங்களை எவ்வாறு பெறுவது என்பது குறித்த கேள்வி உள்ளது. இருப்பினும், நாத்தாண்டிய தம்மிசர வித்தியாலயத்தில் அதற்கான நடைமுறைப் பரீட்சைகளை மேற்கொள்ள முடியும். அடுத்த இரண்டு வாரங்களுக்குள் அதற்காக ஆசிரியர்களை நியமிக்கவும் ஏற்பாடு செய்துள்ளோம். முழு மாகாணத்தினதும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப நாம் எதிர்பார்க்கிறோம்.

300 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த பாடசாலையில் இன்றளவில் 3000 மாணவர்கள் உள்ளனர். கல்வியற் கல்லூரிகள், தேசிய கல்வி நிறுவனம் என்பவற்றை தோற்றுவித்த தற்போதைய ஜனாதிபதி, கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் நாட்டின் கல்விக்காக அளப்பரிய சேவை ஆற்றியுள்ளார். புதிய கல்வி முறையின் கீழ் எந்தவொரு மாணவரையும் சாதாரண தரம் தேர்ச்சி பெறாதவர்கள் என்று அறிவிக்காமல், மாணவர்களின் எதிர்காலத்துக்குத் தேவையான அறிவைப் பெற்றுக்கொடுக்க எதிர்பார்க்கிறோம்.

கரும்பலகைக்கு மாறாக டிஜிற்றல் திரைகளை வழங்குவது நவீன கல்வி முறையாக அமையாது. அதற்கு அப்பாலான வேலைத்திட்டம் எம்மிடத்தில் உள்ளது. செயற்கை நுண்ணறிவு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துடன் கல்வியைப் பலப்படுத்துவோம். அதற்காக ஆசிரியர்களை பயிற்றுவிக்கத் தற்போதே ஆரம்பித்திருக்கிறோம். தேசிய பாடசாலைகள் மற்றும் சர்வதேச பாடசாலைகளிலும் இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. செயற்கை நுண்ணறிவு கல்விக்கான தனியானதொரு பல்கலைக்கழகமும் ஆரம்பிக்கப்படும். அதனால் கல்வியை சர்வதேச மயப்படுத்த முடியும் - என்றார். (எ)

# ஸ்மார்ட் நகரமாகும் யாழ்ப்பாணம்

## உலக சுகாதார ஸ்தாபன அதிகாரிகள் வடக்கு ஆளுநருடன் விசேட சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ்ப்பாணத்தை ஸ்மார்ட் நகரமாக்குவது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸுடன் உலக சுகாதார ஸ்தாபன அதிகாரிகள் விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர். யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இந்த கலந்துரையாடல் நேற்று முன்தினம் நடைபெற்றது.



ஆசியாவில் ஸ்மார்ட் நகரங்களை உருவாக்கும் உலக சுகாதார ஸ்தாபனத்தால், இலங்கையில் இதுவரையில் 17 ஸ்மார்ட் நகரங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் யாழ்ப்பாணம் நகரையும் ஸ்மார்ட் நகரமாக்கும் திட்ட யோசனை கடந்த 2019 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டுள்ளது. எனினும் கோவிட் - 19 பெருந்தொற்று காராணமாக இந்தத் திட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் ஒருங்கிணைப்புடன் இந்த திட்டத்தை செயல்படுத்த உலக சுகாதார ஸ்தாபனம் தற்போது முன்வந்துள்ளதுடன், முன்கள ஆய்வுகளையும் நடத்தியுள்ளது. இதற்கமைய, கழிவு முகாமைத்துவம், சுத்தமான குடிதண்ணீர், தூய்மை, ஆரோக்கியமான உணவு, ஆரோக்கிய வாழ்வை கட்டியெழுப்பக்கூடிய சூழல் கட்டமைப்பு அடங்கலாக ஒன்பது பிரிவுகளின் கீழ் ஸ்மார்ட் நகர திட்டத்தை நடைமுறைப்படுத்த உலக சுகாதார ஸ்தாபனம் தீர்மானித்துள்ளது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஆளுநரின் அனுமதியை பெற்றுக் கொள்ளும் நோக்குடன் இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது. இந்த செயல்பாட்டிற்கான முழுமையான திட்ட முன்மொழிவைச் சமர்ப்பிக்குமாறு இதன்போது ஆளுநர், உலக சுகாதார ஸ்தாபன அதிகாரிகளுக்கு தெரிவித்தார். அத்துடன் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த தேவையான உதவிகளைப் பெற்றுக் கொடுக்குமாறு வடக்கு மாகாண சுகாதார மற்றும் உள்ளூராட்சித் திணைக்களங்களின் அதிகாரிகளுக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார். (எ)

# இலங்கை கிரிக்கெட் சபைக்கான புதிய யாப்பு வரைவு கையளிப்பு

கொழும்பு, ஜூன் 16

இலங்கை கிரிக்கெட் சபைக்கான புதிய யாப்பு வரைவு நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.



ஜனாதிபதி செயலகத்தில் வைத்து புதிய அரசமைப்பு வரைவு கையளிக்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபையை மறுசீரமைப்பதோடு, தேசிய ஆடவர் மற்றும் மகளிர் அணிகளில் நிர்வாகம், பயிற்சி மற்றும் வீரர்களின் நல்வாழ்வை மேம்படுத்துவது உள்ளிட்ட முக்கிய பரிந்துரைகள் இதில் உள்ளடங்கியுள்ளன. (எ)

# ரூ. 21 இலட்சம் பெறுமதியான நகைகள் திருடிய இருவர் கைது

கம்பஹா, ஜூன் 16

கம்பஹா பேலியகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள நிறுவனமொன்றில் தங்க நகைகள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருடப்பட்ட நகைகளின் பெறுமதி 21 இலட்சம் ரூபாய் என பொலிஸார் கூறினர்.

பேலியகொடை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.


எத்துல்கோட்டை மற்றும் பேராதனை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 29 மற்றும் 52 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரைவில் தீர்வு கிடைக்கும்

## பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்ட மாணவிகளுக்கு ஆளுநர் வாக்குறுதி



**திருகோணமலை, ஜூன் 16**
**திருகோணமலை ஸாஹிரா கல்லூரியில் 70 மாணவிகளின் பெறுபேறுகளை இடைநிறுத்திய பரீட்சைகள் திணைக்களம் குறித்து கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம், பாதிக்கப்பட்ட மாணவிகள் நேரில் முறைப்பாடு செய்தனர். இதனையடுத்து விரைவில் தீர்வு பெற்றுத் தரப்படும் என்று ஆளுநர் உறுதியளித்துள்ளார்.**

ஸாஹிரா கல்லூரியின் 70 இற்கும் மேற்பட்ட மாணவிகளின் உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் பரீட்சைகள் திணைக்களத்தால் இடைநிறுத்தப்பட்ட விவகாரம் குறித்தே ஆளுநரிடம் குறித்த மாணவிகள் நேற்றுச் சனிக்கிழமை முறைப்பாடு செய்தனர்.

பரீட்சைகள் திணைக்களத்தின் விதிமுறைகளுக்கு அமைவாக காதுகளை மறைத்து பர்தா அணிந்து பரீட்சை எழுத முடியாத நிலையில், இந்த மாணவிகள் அவ்வாறு பரீட்சைகள் எழுதியதால் பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதனால் தாம் எதிர்கொண்டுள்ள இக்கட்டான நிலைமை குறித்து ஆளுநரின் கவனத்துக்கு கொண்டவந்த மாணவிகள், தமக்கு உரிய தீர்வைப் பெற்றுத் தர விரைவாக நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆளுநரிடம் கோரிக்கை விடுத்தனர்.


மாணவிகளின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட ஆளுநர் செந்தில் தொண்டமான், அவர்களுடைய பிரச்னைகள் குறித்து பரீட்சைகள் திணைக்களத்துடன் கலந்துரையாடி விரைவில் தீர்வைப் பெற்றுத்தருவதாக உறுதியளித்தார். (எ)



# தேசிய பாடசாலைகளின் தேவைகள் பற்றி மன்னாரில் உயர்மட்டக் கலந்துரையாடல்

மன்னார், ஜூன் 16
மன்னார் மாவட்ட தேசிய பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்கள், தளபாடப் பற்றாக்குறை, மாணவர்களின் கற்றலுக்கு ஏதுவான போதுமான கட்டடங்கள் இல்லாமை போன்ற பல்வேறு பிரச்னைகள் தொடர்பான விசேட கலந்துரையாடல் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் தலைமையில் மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கனகேஸ்வரன், வலயக்கல்விப் பணிப்பாளர், திட்டமிடல் பணிப்பாளர், தேசிய பாடசாலைகளின் அதிபர்கள் உள்ளிட்ட பலர் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றனர். (எ)



# ஆட்டோ - மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் மூவர் காயம்

பண்டாரகமை, ஜூன் 16
பண்டாரகமை - கெஸ்பேவ வீதியில் இடம்பெற்ற விபத்தில் மூவர் காயமடைந்தனர். இந்த விபத்து வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றது.

ஆட்டோவும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது. இந்த விபத்தின் போது மூவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்தில் ஆட்டோ முற்றிலும் சேதமடைந்தது. (எ)

# கண்டியில் சக மாணவனை கத்தியால் குத்திய மாணவன்

கண்டி, ஜூன் 16
இரண்டு மாணவர்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறில் கத்திக்குத்துக்கு இலக்கான மாணவன் ஒருவர் காயமடைந்த நிலையில் கண்டி பொது மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றுக்கு முன்பாக இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் கூறினர்.

16 வயதுடைய பாடசாலை மாணவனே காயமடைந்த நிலையில், சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தகராறுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லையெனத் தெரிவித்த பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுடன் மீனவர் கைது

கொழும்பு, ஜூன் 16
வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுடன் மீனவர் ஒருவர் வெள்ளிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளதாக கிராந்துருகோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

கிராந்துருகோட்டை பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய குறித்த பகுதிக்குச் சென்று சோதனை மேற்கொண்ட போது இவர் கைக்குண்டுடன் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உள்ஹிட்டிய கிராந்துருகோட்டை பகுதியைச் சேர்ந்த 27 வயது மீனவர் ஒருவரே இவ்வாறு கைக்குண்டுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் அவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# “வெற்று கோஷங்களை எழுப்பி காலம் கடத்த விரும்பவில்லை”


சிலாபம், ஜூன் 16
வெற்று கோஷங்களை எழுப்பி காலத்தைக் கடத்தும் காலம் இதுவல்ல. அதற்கு தான் விரும்பவும் இல்லை என்றும் நாட்டை அபிவிருத்தி செய்வதே அரசாங்கத்தின் பொறுப்பு எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சிலாபம் கிரிமெட்டியான பௌத்த மகளிர் தேசிய பாடசாலைக்கு நேற்று முன்தினம் பிற்பகல் சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மாணவிகளால் சிறப்பு வரவேற்பளிக்கப்பட்டது.

பாடசாலை வளாகத்தில் அமைந்துள்ள பௌத்த விகாரைக்குச் சென்று பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டு ஆசிர்வாதம் பெற்றுக்கொண்ட ஜனாதிபதி, பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து புதிய கட்டடத்தை மாணவர்களிடம் கையளித்தார்.

புதிய வகுப்பறைகளை பார்வையிடச் சென்ற ஜனாதிபதி மாணவர்களுடன் சிநேகபூர்வ உரையாடலிலும் ஈடுபட்டார்.

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த கல்லூரி



மாணவர்களுக்கான பரிசில்களும் ஜனாதிபதியால் வழங்கி வைக்கப்பட்டதுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நினைவுப் பரிசும் வழங்கி வைக்கப்பட்டது.

இக்கட்டடத்தின் நிர்மாணிப் பணிகளை முடித்துத் தருமாறு மாணவிகள் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க இரண்டு கட்டங்களாக கட்டட நிர்மாணப் பணிகளை நிறைவு செய்யவுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.


நாட்டை அபிவிருத்தி செய்வதே அரசாங்கத்தின் பொறுப்பு என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியதுடன், கோஷங்களை எழுப்பி காலத்தைக் கடத்தும் காலம் இதுவல்ல என்றும் வலியுறுத்தினார்.

நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு புதிய பாதையில் செல்ல வேண்டும் எனவும், அதற்குத் தேவையான பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தி நாட்டில் விரைவான அபிவிருத்தியை ஏற்படுத்த அரசாங்கம் முன்வைக்கும் வேலைத்திட்டத்துடன் அனைவரும் கைகோர்க்க வேண்டுமெனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்தான்குடியில் குடும்பப் பெண்மீது வீட்டுக்குள் நுழைந்து துப்பாக்கிச் சூடு

## தலைமறைவான துப்பாக்கிதாரி கைது



காத்தான்குடி, ஜூன் 16

**இளம் குடும்பப் பெண் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.**

வீடொன்றில் மகனுடன் வசித்து வந்த பெண் மீதே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதுடன் குறித்த துப்பாக்கிதாரி தப்பிச் சென்று தலைமறைவான நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள புதிய காத்தான்குடி மீன்பிடி இலாஹா வீதி அஹமட் லேனில் வெள்ளிக்கிழமை முற்பகல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, குறித்த துப்பாக்கிச் சூட்டில் வீட்டில் வசித்த இளம் பெண் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். குறித்த பெண்ணின் வீட்டுக்கு துப்பாக்கியுடன் வந்த நபர் பெண்ணை துப்பாக்கியால் தாக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றிருந்தார்.

இதில் சித்தீக் சிபானியா (வயது -32) என்பவரே காயமடைந்துள்ளதுடன் இப்பெண்ணின் கணவர் அவுஸ்திரேலியா நாட்டில் தற்போது இருப்பதாகவும் இவர் ஒரு மௌலவி எனவும் , குறித்த பெண்ணுக்கு ஒரு மகன் இருப்பதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மேலும், காத்தான்குடி பொலிஸார் குறித்த பகுதியிலுள்ள சி.சி. ரிவி கமரா காட்சிகளை சோதனை செய்து சந்தேக நபரை அடையாளம் கண்டு ஆரையம்பதி செல்வா நகர் கிழக்கிலுள்ள வீடொன்றில் மறைந்திருந்த நிலையில் கைது செய்துள்ளனர்.

அத்துடன் காயமடைந்த பெண்ணின் வீட்டில் தடவியல் பொலிஸ் பிரிவினர் மேற்கொண்ட மேலதிக விசாரணைகளில் பெண்ணின் வீட்டிலிருந்து துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளதுடன் காயமடைந்த பெண் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ)

# காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் பலி

## கிண்ணியாவில் தொடரும் சோகம்

கிண்ணியா, ஜூன் 16

திருகோணமலை - கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வான்எல சுண்டியாற்று பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு யானை தாக்கி இளம் குடும்பஸ்தர் உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் கிண்ணியா இடிமனையைச் சேர்ந்த 26 வயது குடும்பஸ்தராவார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

குறித்த நபர் சம்பவ தினத்தன்று இரவு தனது தந்தையுடைய பண்ணைக்கு சென்றபோது காட்டு யானை தாக்கியது.

இதனால் குறித்த குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பகுதியில் இரண்டு வாரத்துக்குள் நான்கு பேர் யானை தாக்கி உயிரிழந்தனர் என்று அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. (எ)

# 150 கிலோ போதைப்பொருளுடன் தெற்கு கடற்பரப்பில் 6 பேர் கைது

கொழும்பு, ஜூன் 16

மீன்பிடி படகில் 150 கிலோ கிராம் போதைப்பொருளுடன் ஆறு சந்தேக நபர்கள் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் வெள்ளிக்கிழமை மாலை தென் கடல் பகுதியில் 400 கடல் மைல் தொலைவில் ஹெரோயின் கடத்தியதாக சந்தேகிக்கப்பட்ட இழுவை படகு கைப்பற்றப்பட்டது.

இந்த இழுவை படகு காலி துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டு சோதனை மேற்கொண்டதில் அதிலிருந்து 150 கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த நிலையில், படகிலிருந்த 6 பேரை பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர். (எ)

# கிரிக்கெட் பிரச்னைக்கு நீண்டகால தீர்வு தேவை

## கூறுகிறார் அமைச்சர் ஹரீன்



கொழும்பு, ஜூன் 16

இலங்கை கிரிக்கெட் அணி எதிர்கொண்டுள்ள பிரச்னைக்கு நீண்டகாலத் தீர்வு தேவைப்படுகிறது என்று அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

வரலாற்றில் முதன்முறையாக ரி - 20 உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் முதல் சுற்றிலிருந்து இலங்கை அணி வெளியேறியுள்ள நிலையில்,

இவ்வாறு போட்டியில் தோல்வியடைவது பல வருடங்களாக உள்ள பிரச்னை எனவும் இதற்கு நீண்டகால தீர்வு தேவை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் என்ற ரீதியில் எதிர்காலத்தில் கிரிக்கெட்டுக்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன? என்று அமைச்சரிடம் செய்தியாளர்கள் கேள்வியெழுப்பினர். இதற்கு,


இனி நான்தான் கிரிக்கெட் விளையாட வேண்டும். விளையாட்டு அமைச்சராக நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்கிறீர்கள். இனி போட்டியில் தோற்றால் நான் என்ன செய்வது?

நான் சென்று கிரிக்கெட் விளையாட முடியாது. இது பல வருடங்களாக தொடரும் பிரச்னை. இதற்கு நீண்ட கால தீர்வு தேவை.

நாங்கள் பொறுப்பேற்ற போது இலங்கை கிரிக்கெட் அணி தடை செய்யப்பட்டிருந்தது. எல்லாமே குழம்பி உள்ளது- என்றார். (எ)

# பொருளாதாரம் குறித்து வகுப்பு நடத்த வேண்டும்

## எம். பிகளை சாடிய ஜனாதிபதி



கொழும்பு, ஜூன் 16

21 ஆம் நூற்றாண்டின் பொருளாதாரம் என்ன என்பதை பாராளுமன்றத்தில் உள்ள சிலர் புரிந்து கொள்ள வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அவர்களுக்கும் சில வகுப்புகளை நடத்தலாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கை இளைஞர் சமூகத்துக்காக பொதுக் கற்றலுக்கான கல்வித் தளமான http://www.publiclearn.lk/ இனை உத்தியோகபூர்வமாக அறிமுகம் செய்யும் நிகழ்வு ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ரணில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

புதிய பொருளாதார மாற்றத்துக்காக இலங்கை டிஜிற்றல் மயமாக்கலுடன் வேகமாக முன்னேற வேண்டும்.

தற்போது கல்வித்துறையிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் பணியில் ஈடுபட்டு வருகிறோம்.

எவ்வாறாயினும், ஒரு புதிய பொருளாதார மாற்றத்துக்கான நமது அணுகுமுறையில் மாற்றம் தேவை. நிச்சயமாக நம்மால் அதனை சாதிக்க முடியும்.

எதிர்காலத்தில் வகுப்பறைகள் மற்றும் சுவர்கள் இன்றி பாடசாலைக்கு வெளியிலான கற்றல் வாய்ப்புகள் குறித்து கவனம் செலுத்த வேண்டியிருக்கும். அவ்வாறான திட்டமே இங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வகுப்பறைகளில் திறமையான மற்றும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களின் பற்றாக்குறை சவாலை சமாளிக்க இது ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். மேலும், இந்த வேலைத்திட்டம் இலங்கை மக்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதற்கும், நாட்டில் டிஜிற்றல் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் எனக்கு ஒரு தனித்துவமான வாய்ப்பாக இருக்கும்.

தற்போது கல்வியின் மூன்றாம் கட்டத்தை எட்டியுள்ளோம். அதாவது கல்வி முறையை டிஜிற்றல் மயமாக்கி அறிவை திறந்த தளத்தில் பயன்படுத்த வேண்டும். டிஜிற்றல் பொருளாதாரத்தில் கவனம் செலுத்தியுள்ளோம். அங்கு நவீன அறிவைப் பயன்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில் அறிவைப் பயன்படுத்துவதன் மூலமே நாடு முன்னேற முடியும்- என்றார். (எ)

# அடையாளம் தெரியாத ஆணின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 16

புங்குடுதீவு குறிகட்டுவான் பகுதியில் இனந்தெரியாத ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

இது தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் தொடர்பான திடீர் மரண விசாரணை மேற்கொள்ளப்பட்ட நிலையில், அவரது அடையாளம் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

உயிரிழந்த நபர் 45 முதல் 50 வயதுக்கு இடைப்பட்டவர் எனவும் 05 அடி 02 அங்குலம் உயரம் கொண்டவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதுடன், ஊர்காவற்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
16.06.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆனி 02

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

# பொறுப்புடன் செயல்படுதல் அவசியம்

தமிழ் பொது வேட்பாளர் விடயத்தை ஒரு கோமாளிக் கூத்து என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்தார். பொது வேட்பாளர் நிலைப்பாட்டை எதிர்க்க வேண்டுமென்னும் நோக்கிலேயே, சுமந்திரன் அவ்வாறு குறிப்பிட்டிருந்தார். தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை தோற்கடிக்க வேண்டும் என்பதே அவரது கூற்றுக்கு பின்னாலுள்ள பேரவா. ஆனால், சுமந்திரன் அதனை வெளிப்படையாகவே மேற்கொள்கின்றார் - அந்த வகையில் சுமந்திரனின் கருத்தை ஒருவர் தெளிவாக புரிந்துகொள்ள முடியும்.

நிலைமைகளை அவதானித்தால் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை சுமந்திரன் மட்டும் எதிர்க்கவில்லை மாறாக தமிழ் தேசியம் என்னும் சொல்லை உச்சரித்துக் கொண்டிருப்பவர்களும் இதனை குழப்ப முடியும் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். தமிழ் பொது வேட்பாளராக நான் போட்டியிட முடியும் - எனக்கு அதற்கான தகுதியுண்டு என்றவாறான அறிக்கைகளை சிலர் வெளியிட்டுவருகின்றனர். இவ்வாறான அறிக்கைகள் தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவான நிலைப்பாடு அல்ல - மாறாக அதனை மலினப்படுத்தி, தோற்கடிக்கும் ஒரு முயற்சியாகும்.

ஒரு விடயம் கேலிக்கூத்தாவது வேறு, அதனை திட்டமிட்டு கேலிக் கூத்தாக மாற்ற முயற்சிப்பது வேறு. தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் தற்போது இடம்பெற்றுவருவது அதுதான். இந்த விடயம் தொடர்பில் சிவில் சமூக அமைப்புக்கள் குழாம் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்படவேண்டும். இவ்வாறான பொறுப்பற்ற செயல்பாடுகள் இடம்பெறும் போது, அதற்கு எதிர்வினையாற்றவேண்டும் இல்லாவிட்டால், தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு இறுதியில் கோமாளிக் கூத்தாக முற்றுப் பெற்றுவிடலாம்.

தமிழ் தேசியம் என்று உச்சரிப்பவர்கள் அனைவரும் தமிழ் தேசியவாதிகள் அல்லர் - அதேபோன்று, தமிழ் தேசியம் என்று அடிக்கடி உச்சரிக்காதவர்கள் அனைவரும் தமிழ் தேசியத்திற்கு எதிரானவர்களும் அல்லர். இதனை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். தமிழ் தேசியத்தை ஆதரிப்பதாக கூறியே, கொழும்பின் நிகழ்சி நிரலுக்கு பணியாற்ற முடியும்.

தமிழ் பொது வேட்பாளராக யாரை முன்னிறுத்த வேண்டும் என்பது - சிவில் சமூக கட்டமைப்பும், அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து மேற்கொள்ள வேண்டியது தீர்மானம் - எனவே அது தொடர்பில் தேவையற்ற வகையில் எவரும் கருத்துக் கூற வேண்டியதில்லை.

ஆரம்பத்திலிருந்தே எவ்வாறான ஒருவர் தமிழ் பொது வேட்பாளராக முன்னிறுத்தப்பட வேண்டும் என்பது தொடர்பில் தெளிவான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் எதற்காக சிலர் அவசரப்படுகின்றனர்? அவர்களது இரகசிய நோக்கம் என்ன? சிவில் சமூக முன்னெடுப்பை குழப்புவதுதான் அவர்களது நோக்கமா? இது தொடர்பில் சிவில் சமூக கட்டமைப்பும் அதே போன்று, அரசியல் கட்சிகளும் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

# இனப்பிரச்னைக்கு தீர்வைக் காண்பதற்கு வரலாற்று முக்கியத்துவ வாய்ப்பைத் தரும் ஜனாதிபதி தேர்தல்

ශ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் இனநெருக்கடிக்கு தீர்வைக் காண்பதற்கான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வாய்ப்பு ஒன்றைத் தருவதாகக் கூறும் தேசிய சமாதானப் பேரவை அந்த தேர்தலின் முடிவு எத்தகையதாக இருந்தாலும் அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதை ஆதரித்து பரந்தளவிலான தேசிய நல்லிணக்க செயன்முறையை முன்னனெடுப்பதில் வேட்பாளர்கள் ஒன்றுபட உறுதிபூணுவதற்கு வாய்ப்பு ஒன்றை தற்போதைய தருணம் தருவதாக உறுதியாக நம்புகிறது.

இது தொடர்பில் தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

அதன் விபரம் வருமாறு -

2022 பொருளாதார வீழ்ச்சிக்கு பின்னரான அரசியல் சூழ்நிலை நீண்டகால இனநெருக்கடி தொடர்பில் தேர்தல் அரசியலில் நேர்மறையான ஒரு மாறுதலை ஏற்படுத்தியிருக்கிறது. நாட்டில் "முறைமை மாற்றம்" ஒன்று தேவை என்ற சிந்தனை இனவெறியைப் பகிரங்கமாக நிராகரித்து சகல குடிமக்களுக்கும் சமத்துவமான உரிமைகள் வேண்டும் என்பதை தங்களது சுலோகமாகக் கொண்ட மாணவர்கள் தலைமையிலான போராட்ட இயக்கத்தினால் தூண்டிவிடப்பட்டது.

அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தையும் மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பரவலாக்கம் செய்வதையும் ஆதரிப்பதில் மூன்று பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களும் கடந்த காலத்தில் கற்பனை செய்து பார்த்திருக்க முடியாத வகையில் போட்டி போடுகிறார்கள்.

இது வன்முறைகளைத் தூண்டிவிட்டு வாக்குகளை அறுவடை செய்வதற்கு குறுகிய இனத்துவ தேசியவாதம் பயன்படுத்தப்பட்ட கடந்த காலத்தில் இருந்து வேறுபட்டதாக தற்போது ஏற்பட்டிருக்கும் மாற்றத்தின் ஒரு அம்சம்.

13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதை ஆதரிக்கப் போவதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச எடுத்திருக்கும் நிலைப்பாட்டை தேசிய சமாதானப் பேரவை மெச்சுகிறது.

13ஆவது திருத்தம் 1987 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நிறைவேற்றப்பட்ட நாட்களில் இருந்து இன்றுவரை மாகாணங்களுக்கு பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. அவ்வாறு அந்த அதிகாரங்களை வழங்கினால் நாட்டின் தேசிய ஐக்கியத்துக்கும் சுயாதிபத்தியத்துக்கும் ஆபத்து நேரும் என்று காரணம் கூறப்பட்டது.

உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்து பதினைந்து வருடங்கள் கடந்துவிட்ட பிறகு அத்தகைய அச்சத்துக்கு அடிப்படை எதுவும் இல்லை என்றும் பொலிஸ், காணி அதிகாரங்கள் உள்ளடங்கலாக 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தாமல் இருப்பது உண்மையில் அரசியலமைப்பை மீறுகின்ற செயல் என்றும் தேசிய சமாதானப் பேரவை கருதுகிறது. அத்தகைய மீறல் இல்லாமல் போகவேண்டும்.

13ஆவது திருத்தத்தின் கீழ் பரவலாக்கப்பட்ட அதிகாரங்கள் தொடர்பில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டத்துறைப் பேராசிரியர் அருளானந்தம் சர்வேஸ்வரன் போன்ற சுயாதீனமான கல்விமான்களினால் மேற்கொள்ளப்பட்ட அறிவார்ந்த ஆய்வு இதை தெளிவுபடுத்துகிறது.

அதேவேளை, ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் 13 வது திருத்தத்தின் நடை முறைப்படுத்தலையும் மாகாணசபைகள் முறையையும் ஆதரிப்பதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுரா குமார திசாநாயக்க உறுதி கூறியிருப்பது குறிததும் தேசிய சமாதானப் பேரவை மகிழ்ச்சியடைகிறது.

ஒரு காலத்தில் 13 வது திருத்தத்தை மிகவும் கடுமையாக எதிர்த்த ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) வைப் பொறுத்தவரை, இந்த புதிய நிலைப்பாடு எதிர்க்கட்சி என்ற வகையிலான வகிபாகத்தில் ஏற்பட்டிருக்கும் குறிப்பிடத்தக்க ஒரு மாற்றமாகும்.

அதிகாரப் பரவலாக்கல் விவகாரத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடைப்பிடித்துவரும் உறுதியான நிலைப்பாட்டை நாம் மெச்சுகிறோம்.பொலிஸ், காணி அதிகாரங்கள் உள்ளடங்கலாக 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதை ஆதரிப்பதாக அவர் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட உடனடியாக கூறினார்.

இனநெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு அவசியமான இரு தரப்பு மற்றும் பல கட்சிக் கருத்தொருமிப்பு நீண்டகாலமாக இலங்கையிடமிருந்து நழுவியது. கடந்த காலத்தில் தமிழ்த் தலைவர்களுடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்ட அரசாங்க தலைவர்களினால் உறுதிமொழிகளைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது. இனத்துவ தேசியவாத அச்ச உணர்வுகளை தங்களது அரசியல் அனுகூலத்துக்கு பயன்படுத்துவதில் நாட்டம் காட்டிய போட்டி எதிர்க்கட்சிகளே அந்த துரதிர்ஷ்டவசமான நிலைமைக்கு காரணமாகும்.

சிவில் சமூகமும் அதன் சொந்த முன்முயற்சிகளின் ஊடாக அரசியல் இணக்கத் தீர்வு ஒன்றை நோக்கிய கருத்தொருமிப்பை பெறுவதற்கான தேசிய முயற்சிகளில் இணைந்துகொள்ள முடியும். ஒப்புரவானதும் நிலைபேறானதுமான முறையில் இனநெருக்கடிக்கு தீர்வைக் காண்பதற்கு " இமாலயப் பிரகடனத்தில் " உள்ள ஒரு தொகுதி கூட்டு கோட்பாடுகளின் மூலமாக புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் பிரதிநிதிகளும் பௌத்த மதகுருமாரும் கண்ட இணக்கம் இதற்கு ஓர் உதாரணமாகும்.

அத்தகைய முன்முயற்சிகள் சகல கட்சிகளினதும் சிவில் சமூகத்தினதும் பங்கேற்புடன் புதிய அரசியலமைப்பு ஒன்றை வடிமைக்கும் செயனமுறையாக வளர்ச்சியடைய முடியும்.

ஜனாதிபதி தேர்தலின் முடிவு எத்தகையதாக இருந்தாலும், 13 வது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதையும் பரந்தளவிலான நல்லிணக்கச் செயன்முறையை முன்னெடுப்பதையும் ஆதரிப்பதற்கு அந்த தேர்தலின் உத்தேச வேட்பாளர்கள் ஒன்றுபட்டு உறுதியெடுத்துக் கொள்வதற்கான வாய்ப்பை தற்போதைய சூழ்நிலை வழங்குகிறது என்று தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது.

அதற்குப் பிறகு பொருளாதாரத்தை எவ்வாறு நிலையுறுதிப்படுத்துவது, மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள மக்கள் பிரிவினருக்கு உதவுவதற்கான சமூகப்பாதுகாப்பு ஏற்பாடுகளை எவ்வாறு கட்டியெழுப்புவது, நாட்டுக்கு இருக்கும் வளர்ச்சி ஆற்றல்களை எவ்வாறு கட்டவிழ்ப்பது என்பதில் ஜனாதிபதியினாலும் அரசாங்கத்தினாலும் கவனத்தைச் செலுத்தவும் ஆட்சிமுறை மற்றும் ஊழல் பிரச்னைகளைக் கையாளவும் கூடியதாக இருக்கும்.

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒவ்வொரு நாளும் ஒரு மில்லியன் லொறி கடல் மணல்!

சிதம்பரம் இரவிச்சந்திரன்

உலகக் கடல்களில் இருந்து ஒவ்வொரு நாளும் எடுக்கப்படும் ஒரு மில்லியன் லொறி கடல் மணல், ஏற்கனவே கடல்நீர் மட்ட உயர்வு மற்றும் புயல்களால் பாதிக்கப்பட்டுள்ள கடல்சார் சூழல் மற்றும் கடலோர சமூகத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது என்று உலகளவில் இது பற்றி முதல்முறையாக நடத்தப்பட்ட ஆய்வுகள் கூறுகின்றன. மணல் அகழ்வுத் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணிக்க அமைக்கப்பட்ட சர்வதேச தரவு தளத்தின் மூலம் அதிர்ச்சி தரும் இந்த செய்தி வெளிவந்துள்ளது.

ஐநாவின் சூழல் அமைப்பால் (UNEP) ஏற்படுத்தப்பட்ட இந்தத் தளம் தானியங்கி அடையாளம் காணும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கடல் சூழலில் மணல் அகழ்ந்து எடுக்கப்படும் இடங்களை கப்பல்களைக் கொண்டு கண்டறிந்து, இந்தத் தரவுகள் பெறப்பட்டன.

**ஆண்டிற்கு ஆறு பில்லியன் தொன்**

கடல் மணல் கண்காணிப்பு அமைப்பு 2012-19 தரவுகளை இதற்காக ஆராய்ந்தபோது உலகம் முழுவதும் மணல் எடுப்பதில் ஈடுபட்டுள்ள தொழிற்துறை ஆண்டிற்கு 6 பில்லியன் தொன்கள் மணலை கடல்களில் இருந்து அகழ்ந்தெடுப்பது தெரிய வந்துள்ளது. ஆண்டிற்கு ஆண்டு இந்த அளவு அபாய நிலையை நோக்கி சென்று கொண்டிருக்கிறது . இழக்கப்படும் அளவை ஈடு செய்ய 10 முதல் 16 பில்லியன் தொன்கள் மணல் ஆறுகளில் இருந்து அடித்து வரப்பட்டு கடலில் சேர்க்கப்படுகிறது. கடலோரக் கட்டமைப்புகள் மற்றும் கடற்சார் சூழலைப் பேணிப் பாதுகாக்க அவசியமான இயற்கை எல்லையை, அகழ்வுகள் தொடும் அளவிற்கு மணல் எடுத்தல் நடக்கிறது என்று ஐநா சூழல் பாதுகாப்புத் திட்டம் எச்சரிக்கிறது.

வட கடல், தென் கிழக்கு ஆசியா, யு எஸ்ஸின் கிழக்குக் கடற்கரைப்பகுதி ஆகிய இடங்களில் இது கவலை தரும் அளவில் உள்ளது என்று இந்த ஆய்வு கூறுகிறது.

ஆசியப் பகுதிகள் உட்பட மணல் எடுத்தல் தீவிரமாக நடக்கும் பல இடங்களில் ஆறுகள் கொண்டு வந்து நிரப்பும் அளவை விட அதிக அளவில் மணல் எடுக்கப்படுகிறது.

கடலுக்கு அடியில் நடைபெறும் இந்த சட்டவிரோத சுரண்டல் உயிர்ப் பன்மயத் தன்மைக்கு பாதிப்பு ஏற்படுத்துவோடு, அடித்தட்டில் சேறு படிந்துள்ள பகுதி வரை மணல் வாரப்பட்டு உருவாக்கப்படும் நீர் அற்ற




நிலை, கடல்வாழ் உயிரினங்கள் ஒலி மாசால் பாதிக்கப்படுதல் போன்ற சூழல் சீர்கேடுகளை ஏற்படுத்துகிறது என்று ஐநா சூழல் அமைப்பின் ஜெனீவா கிரிட் பிரிவு இயக்குனர் பாஸ்கல் பெடூசி கூறுகிறார்.

இதனால் ஏற்படும் சூழல் பாதிப்புகள் குறைக்கப்பட வேண்டும். கடலின் மணல் வளம் சூழல் நட்புடைய விதத்தில் மேலாண்மை செய்யப்பட வேண்டும் என்று பெடூசி கூறுகிறார். கடல் மணல் மதிப்புமிக்க முக்கியப் பொருளாகக் கருதப்பட வேண்டும். ஐநாவின் ஜெனீவா பகுப்பாய்வு மையத்தால் உருவாக்கப்பட்டு மணல் கண்காணிப்பு அமைப்பால் பயிற்றுவிக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் தானியங்கி முறை தரவுகளைப் பயன்படுத்தி உலகக் கடல்களில் மணல் எடுக்கும் கலன்களின் நடமாட்டத்தைக் கண்காணித்தது.

மணல் மற்றும் சரளைக்கற்களே பூமியில் இருந்து எடுக்கப்படும் பொருட்களில் பாதி இடத்தைப் பிடிக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் உலகளவில் 50 பில்லியன் தொன் மணல் மற்றும் சரளைக் கற்கள் பயன்படுத்தப்படுகின்றன. இது 27 மீட்டர் நீளமும் 27 மீட்டர் அகலமும் உடைய நிலநடுக்கோட்டைச் சுற்றிலும் எழுப்பப்படும் சுவருக்கு சமமான அளவு. மணல் கான்க்ரீட் மற்றும் இயற்கையான தரைப்படுகை அல்லது பெட்ரோலியப் பொருட்களில் இருந்து கிடைக்கும் கசடைப் பயன்படுத்தி உண்டாக்கப்படும் மண் பொருட்களுக்கான முக்கிய மூலப்பொருள்.

நாம் குடியிருக்கும் வீடுகள், கட்டிடங்கள், ஜன்னல்களில் உள்ள கண்ணாடிகள், சாலையில் போடப்பட்டுள்ள சரளைக் கற்கள் என்று பல வகைகளில் மனித சமூகம் மணலால் கட்டப்பட்டுள்ளது. பசுமை வழிக்கு மாற உதவும் காற்றாலைகளை அமைப்பது முதல் மற்ற பல தேவைகளுக்கும் நமக்கு கான்க்ரீட் அவசியமாக உள்ளது.

கடலோரப் பகுதிகளில் இருந்து மணல் எடுப்பதைத் தடை செய்ய வேண்டும், கடலில் இருந்து மணல் எடுப்பதை ஒழுங்குபடுத்த வேண்டும், நிலப்பகுதியில் குவாரிகளில் இருந்து மணல் எடுப்பதை கட்டுப்பாடுகளுடன் அனுமதிக்க வேண்டும் என்று ஐநா பரிந்துரை செய்கிறது. மணல் மற்றும் மற்ற பொருட்களை கடல் மற்றும் நதிச்சூழலில் இருந்து தொடர்ந்து எடுப்பது நதி அல்லது கடலோரப் பகுதியின் கட்டமைப்பை மாற்றிவிடும். கடலின் ஆழ்பகுதியை வளமற்றதாக்கி விடும். இது மிக ஆபத்தானது.

கடலில் மணல் எடுக்கும் கலன்கள் ஆழ்கடலில் வெற்றிடச் சுத்திகரிக்கும் இயந்திரங்களைப் போல செயல்படுகின்றன. அடித்தட்டு மணலில் வாழும் அனைத்து வகையான நுண்ணுயிரிகளும் நசுக்கி அழிக்கப்பட்டு அங்கு உயிரற்ற சூழ்நிலை உருவாக்கப்படுகிறது. இந்த மணல் தரிசான பூமிக்கு எடுத்துச் செல்லப்படும்போது அங்கு எந்த உயிரினமும் உயிர் வாழ முடியாது. ஆனால் ஆழ்கடலில் 30-50 செண்டிமீட்டர் மணல் அங்கேயே விடப்பட்டால் அங்குள்ள உயிரினங்கள் உயிர் பிழைத்துக் கொள்ளும்.

இந்த ஆய்வுகள் மிதமிஞ்சி மணல் எடுக்கும் நிறுவனங்களின் பெயரைக் குறிப்பிட அல்லது அவற்றை அவமானப்படுத்த நடத்தப்படவில்லை. ஆனால் உலகின் எங்கோ ஒரு மூலையில் மனித நடமாட்டம் எதுவும் இல்லாத ஆழ்கடல் பகுதியில் இருந்து எடுக்கப்படும் சூழல் சுரண்டலை வெளிச்சத்திற்கு கொண்டு வரவே ஐ நாவின் இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மறைக்கப்படும் இந்தப் பிரச்சனையை இந்த ஆய்வுகள் இப்போது உலகறியச் செய்துள்ளது.

# இந்தவார ராசிபலன் 16.06.2024 - 22.06.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - ஆனி 02

நல்ல நேரம்: 7.30 - 08.30 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : சூன்ய

**மேஷம்** [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் உங்கள் சந்தோஷ தருணங்களை குடும்பத்தாரோடு கழித்து மகிழ்வீர்கள். அதன் காரணமாக குடும்பத்தில் குதூகலம் நிலவும். வீட்டில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் கோலாகலமாக நிறைவேறும். கடைசியில் விருந்து, கேளிக்கைகளில் என மகிழ்ச்சியின் உச்சிக்குச் செல்வீர்கள். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும்.

**ரிஷபம்** [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் எதிர்பாராத தன வரவுகள் மனதில் மகிழ்ச்சி ஏற்படும். பக்திப் பிரசங்கங்கள் கேட்பதில் ஆர்வம் ஏற்படும். முன்பின் தெரியாதவர்கள் கூட உங்களுக்கு உதவ முன் வருவார்கள். மேடைப் பேச்சாளர்கள் அவர்களின் பேச்சு வன்மையால் வருமானம் அதிகரிக்கும். புதிய வியாபார தொடர்புகள் இலாபம் அதிகரிக்கும். பதவி உயர்வின் மூலம் பணப்பயன்களை அடைவீர்கள். புதிட்டமிட்டபடி புதிய விரிவாக்கங்கள் செய்து முடிப்பீர்கள். அதன் காரணமாக வருவாய் ஓரளவு அதிகரிக்கும். கௌரவப் பதவிகள் கிடைத்துப் புகழும், பெருமையும் சேரும்.

**மிதுனம்** [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். புதிய பதவிகள் தேடிவரும். அந்தஸ்து உயரும். விவசாயிகளுக்கு ஆதாயம் கிட்டும். மாணவர்களின் தேர்வு முடிவுகள் மகிழ்ச்சி தருவதாக இருக்கும். பொழுது போக்கும் விதமாக, நமக்கு எல்லா நாட்களும் விடுமுறை நாட்களாக இருப்பதில்லை. கேளிக்கை மற்றும் ஆடம்பர செலவுகள் அதிகமாவதின் காரணமாகப் பணமுடை ஏற்பட வாய்ப்பு உண்டு. நேர்மையும் கடின உழைப்பும் மட்டும் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை அளிக்கும்.

**கடகம்** [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் கணவன், மனைவி இடையே அன்பும் பாசமும் பெருகும். புத்தி சாதுர்யத்தால் வாழ்க்கையில் பொருளாதார நிலை சீராகும். குழந்தைகள் படிப்பு வகையில் செலவுகள் அதிகரிக்கும். எதிர்கால தொழில் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு விரிவாக்கத் திட்டங்களில் முதலீடுகள் செய்வது முன்னேற்றத்தைத் தரும். இலாபம் அதிகம் பெற புதிய விற்பனை யுக்திகள் கையாள்வீர்கள். சுறுசுறுப்பற்ற நிலையில் காரியத் தடைகள் ஏற்படும்.

**சிம்மம்** [ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் மனதுக்குப் பிரியமான மங்கையுடன் ஏற்படும் இனிய பயணங்களால் இன்புறுவீர் கள். வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தாய் மாமனுக்கு நன்மை ஏற்படும். தொலை தூரம் பயணங்களால் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும்.

**கன்னி** [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். சீரான பொருளாதார நிலையில், மனதிற்குப் பிடித்த படி மனை, வண்டி வாகனம் என அனைத்தும் கிடைக்கும். மாணவர்கள் காலத்தை வீணாக்காமல் கருத்துடன் படித்துப் பெற்றோர்களுக்கு பெருமை சேர்க்க வேண்டும். எந்த ஒரு காரியத்தையும் ஒ[illegible]டன் செயல்பட்டால் உன்னத நிலையை அடையலாம். அரசுப் பணிக்கான தேர்வுகளில் வெற்றி பெற்று, புதிய பதவிக்கான பணி உத்தரவை பெறுவர். ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும்.

**துலாம்** [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

எடுத்த புதிய நடவடிக்கைகள் வெற்றி பெறும். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் உடனடியாக கிடைக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. வியாபாரிகள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர். பெண்களின் அறிவுத்திறன் கூடும். பண விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்ல முன்னேற்றம் ஏற்படும். மகிழ்ச்சி பொங்கும்.

**விருச்சிகம்** [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் வாக்கு வன்மை ஓங்கும். வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். வீடு, மனை ஆகியவை கிடைக்கும். சிலருக்குத் திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகும். சுபகாரியங்களுக்கு வீடே விழாக்கோலம் பூணும். சந்ததி விருத்தி ஏற்படும். மகிழ்ச்சியும் ஏற்படும். தொழிலில் எதிர்பார்த்த படி பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும்.

**தனுசு** [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். வீரம் பொங்கும். உங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்படும். நீங்கள் எதிர்பாராத விதத்தில் இடமாற்றங்கள் ஏற்படலாம். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம்.

**மகரம்** [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். சிலர் பலவகையிலும் பிறரால் குற்றம் சாற்றப்பட்டு அவதிப்பட நேரலாம். பணிபுரியும் பெண்கள் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். புதிய வீடு, பூமி வாங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகலாம். வாகனங்களில் செல்லும் போது கவனமாக செல்லவும். எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது. ஏதாவது மனக்குறை இருந்து கொண்டே இருக்கும். உபாதைகள் ஏற்படலாம்.

**கும்பம்** [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு வந்து ஏற்றம் காண்பீர்கள். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். எடுக்கும் முயற்சிகளில் எப்பாடுபட்டாவது வெற்றி அடைவீர்கள். ஆயினும் முயற்சிகள் வெற்றி அடைய அதிக உழைப்பு தேவைப்படும். சிலருக்கு உறவுகள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் ஆகியோரின் ஒத்துழைப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். மாணவர்களுக்கு படிப்பில் தேர்ச்சி ஏற்பட்டு, அறிவுச் சுடரொளி வீசும். எதிரிகளின் கொட்டம் அடங்கும்.

**மீனம்** [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் உங்கள் வாழ்க்கையில் மனைவி மூலமாக முன்னேற்றத்துக்கான நல்ல ஆலோசனைகள் கிடைக்கும். உங்கள் திறமை மிக்க செயல்களால் வெற்றிகளும், பாராட்டுதல்களும் குவியும். வெளியூர்ப் பயணங்கள், வெற்றிகரமாகவும், இலாபகரமாகவும் அமையும். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். மேலதிகாரிகளின் உதவியால் உயர் பதவிகள் கிடைக்கும். உறவுகளை அனுசரித்து சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளை குறைத்தால் பொருளாதாரச் சிக்கல்களில் இருந்து மீளலாம். வேலையில் சிரத்தையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித்தும் அநுரா குமாரவும் தமிழர்களுக்கு வாக்குறுதி அளிப்பது அல்ல அரசியல் தீர்வுக்கான தங்களது திட்டங்களை சிங்கள மக்களுக்கு விளக்குவதே முக்கியம்!

கடந்த நான்கு தசாப்தங்களுக்கும் அதிகமான காலப்பகுதியில் ஜனநாயக ஆட்சிமுறைக்கு பாதகமான பல அரசியலமைப்புத் திருத்தங்கள் இலங்கை அரசியலமைப்புக்கு கொண்டுவரப்பட்டன. ஆரம்ப எதிர்ப்புகளைத் தவிர பிறகு அவற்றில் எதுவுமே பெரிய சர்ச்சைக்கு உள்ளாக்கப்படவில்லை.

ஆனால், கணிசமான ஜனநாயக பரிமாணத்தைக் கொண்ட 13வது திருத்தம் மூன்றரை தசாப்தங்களுக்கு மேலாக அரசியலமைப்பில் இருக்கின்ற போதிலும், நெடுகவுமே சர்ச்சைக்குரியதாக இருந்துவருகிறது.

1987 ஜூலை இந்திய -- இலங்கை சமாதான உடன்படிக்கையைத் தொடர்ந்து மாகாணசபைகள் முறையை அறிமுகப்படுத்துவதற்காக கொண்டுவரப்பட்ட அந்த திருத்தத்தை இதுகாலவரையில் பதவியில் இருந்த எந்தவொரு அரசாங்கமும் உரிய முறையில் நடைமுறைப்படுத்தவில்லை. அந்த திருத்தம் தொடர்பில் அடிக்கடி அரசியல் சர்ச்சைகள் மூளுகின்றன. ஜனாதிபதி தேர்தலை நாடு எதிர்நோக்கும் நிலையில் மீண்டும் ஒரு சர்ச்சை மூளக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

இரு பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரா குமார திசாநாயக்கவும் தங்களது எதிர்கால அரசாங்கம் 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் என்று கடந்தவாரம் யாழ்ப்பாணத்தில் அறிவித்திருக்கிறார்கள்.

நான்கு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு கடந்த வாரம் வடக்கிற்குச் சென்ற எதிர்க்கட்சி தலைவர் சஜித் கிளிநொச்சியில் வைபவம் ஒன்றில் உரையாற்றியபோது தனது அரசாங்கம் 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் என்று உறுதியளித்தார்.

அதற்கு முன்னதாகவே அவர் கொழும்பில் மேதினப் பேரணியில் உரையாற்றிய வேளையிலும் சிறுபான்மைச் சமூகங்களின் பிரச்சினைகளை சிங்கள மக்களின் ஆதரவுடன் தீர்த்துவைப்பதற்கு முயற்சிகளை முன்னெடுக்கப் போவதாவும் 13 திருத்தத்தை நடைமுறைப்படுத்தப்போவதாகவும் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் பல தமிழ்க் கட்சிகளின் தலைவர்களையும் சஜித் சந்தித்தார். சஜித்தின் நிலைப்பாட்டுக்கான தங்களது பிரதிபலிப்புக்களை அவர்கள் அவரிடம் நேரடியாகவே கூறினர்.

முதலில் கடந்த திங்கட்கிழமை இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர்களை சந்தித்துப் பேசிய பிரேமதாச, 13 வது திருத்தம் குறித்த தனது தற்போதைய நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார். பிறகு செய்தியாளர்களைச் சந்தித்த பிரேமதாசவிடம் மாகாணசபைகளுக்கு பொலிஸ், காணி அதிகாரங்களையும் வழங்குவீர்களா என்று கேட்கப்பட்டது. பொலிஸ், காணி அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு வழங்கப்படும் என்று நேரடியாக பதிலளிப்பதை தவிர்த்த அவர் அரசியலமைப்பில் உள்ள 13 வது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்றும் 13 பிளஸூம் இல்லை மைனஸூம் இல்லை என்று சொன்னார்.

அதேவேளை, மறுநாள் யாழ்நகரில் தமிழரசு கட்சியின் தலைவர்களைச் சந்தித்த அநுரா குமாரவும் கூட தேசிய மக்கள் சக்தியின் எதிர்கால அரசாங்கம் புதிய அரசியலமைப்பு ஒன்றின் மூலமாக தேசிய இனப்பிரச்னைக்கு தீர்வைக் காண்பதற்கு நடவடிக்கைகளை எடுக்கும் என்றும் அதற்கு முன்னதாக மாகாணசபைகள் முறை உகந்த முறையில் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர்களிடம் உறுதியளித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் 2019 ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் மாகாணசபைகள் முறை தொடர்ந்து நடைமுறையில் இருப்பதை உறுதிசெய்வது குறித்து வழங்கிய உறுதிமொழியையும் அவர் அங்கு நினைவுபடுத்தினார்.

அரசியல் மற்றும் நிருவாகம் அதிகாரங்களைப் பரவலாக்குவதன் மூலமாக சமத்துவம் மற்றும் ஜனநாயக கோட்பாடுகளின் அடிப்படையில் புதிய அரசியலமைப்பு ஒன்றுக்குள் நிலைபேறான தீர்வு ஒன்று காணப்படும் வரை மாகாணசபைகள் பயனுறுதியுடைய முறையில் தொடர்ந்து செயற்படுவது உறுதிப்படுத்தப்படும் என்று அந்த விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால், அதற்கு பிறகு 13 வது திருத்தம் தொடர்பில் மூண்ட சர்ச்சைகளின்போது தேசிய மக்கள் சக்தி சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட முறையில் தெளிவான நிலைப்பாட்டை முன்வைக்கவில்லை. மாகாணசபைகளை உகந்தமுறையில் செயற்படவைப்பது என்றால் அது13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதை தவிர வேறு எதுவுமாக இருக்கமுடியாது.

தமிழரசு தலைவர்களிடம் அநுரா குமார கூறிய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது தேசிய மக்கள் சக்தி தற்போது அந்த திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதை ஆதரிக்கிறது என்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கிறது. அதே வேளை தமிழ் அரசியல் கட்சிகள் கூறிவருவதைப் போன்று 13 வது திருத்தம் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு அல்ல என்பதே தங்களது நிலைப்பாடும் என்று குறிப்பிடவும் அவர் தவறவில்லை.

இரு மாதங்களுக்கு முன்னர் வடக்கிற்கு சென்று சமஷ்டியை தருவதாகவோ அல்லது 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாகவோ உறுதிமொழி கூறி தமிழ் மக்களின் வாக்குகளுக்காக பேரம் பேசுவதற்கு தயாராயில்லை என்று கூறிய அநுரா குமார, தற்போது 13 வது திருத்தத்துக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்திருக்கிறார். ஆனால் அவர் பொலிஸ், காணி அதிகாரங்கள் பற்றி பிரத்தியேகமாக எதையும் யாழ்ப்பாணத்தில் கூறவில்லை.



> சஜித்தும் அநுரா குமாரவும் தங்களது உறுதிமொழிகளை நிறைவேற்றுவார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. ஆனால் எதிர்கால அரசாங்கம் ஒன்று 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முன்வரும்போது இவர்கள் இருவரும் அதை எதிர்க்கமுடியாது.

சஜித்துக்கும் அநுரா குமாரவுக்கும் முன்னதாக அந்த திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதைப் பற்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வருடம் பேசிய போது தென்னிலங்கையில் கடும்போக்கு சிங்கள தேசியவாத சக்திகளும் பௌத்த பிக்குமாரும் கடுமையாக எதிர்த்தனர்.

யாழ்நகரில் 2023 தேசிய தைப்பொங்கல் விழாவில் உரையாற்றிய ஜனாதிபதி 13 வது திருத்தத்தை இரு வருடங்களில் முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு தனது அரசாங்கம் கட்டங்கட்டமாக நடவடிக்கை எடுக்கும் என்று அறிவித்தார். வெகுண்டெழுந்த பிக்குமார் ஜனாதிபதி பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை சம்பிரதாயபூர்வமாக தொடக்கிவைத்து தனது அரசாங்கத்தின் கொள்கை விளக்கவுரையை (8 பெப்ரவரி 2023 ) நிகழ்த்திக் கொண்டிருந்தபோது வெளியே ஆர்ப்பாட்டம் செய்து 13 வது திருத்தத்தின் பிரதிகளை தீயிட்டுக் கொளுத்தினர்.

ஜனாதிபதி செயலகத்தில் பாராளுமன்ற அரசியல் கட்சிகளின் மகாநாட்டில் ஒரு தடவை விக்கிரமசிங்க அரசியலமைப்பில் இருக்கும் 13 வது திருத்தத்தை ஒன்றில் நடைமுறைப்படுத்த வேண்டும் அல்லது ஒழித்து



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

விடவேண்டும் என்றும் கடுமையான தொனியில் கூறினார். அந்த திருத்தத்தை ஒழிப்பதற்கு புதிய அரசியலமைப்புத் திருத்தம் ஒன்றை பாராளுமன்றத்தில் எந்த உறுப்பினரும் தனிநபர் சட்டமூலமாகக் கொண்டுவரலாம் என்று அவர் ஆலோசனையும் கூறினார். ஆனால் அவ்வாறு எவரும் இதுவரை செய்ய முன்வரவில்லை.

கடந்த வருடம் ஜூலையில் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமாகச் செல்வதற்கு சில தினங்கள் முன்னதாக ஜனாதிபதி மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்கள் இல்லாமல் 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் யோசனையையும் தமிழ்க் கட்சிகளிடம் கூறினார். ஆனால் அந்த கட்சிகள் அதை திட்டவட்டமாக நிராகரித்துவிட்டன. அதற்கு பிறகு அவர் அந்த திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது குறித்துப் பேசுவதை பெரிதும் தவிர்த்துக் கொண்டார்.

தற்போது சஜித்தும் அநுரா குமாரவும் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களிடம் அளித்த உறுதிமொழிகள் குறித்து எந்த பிரதிபலிப்பையும் வெளிக்காட்டவேண்டிய தேவை ஜனாதிபதிக்கு இருப்பதாக தெரியவில்லை ஏனென்றால் அவர் 13 வது திருத்தம் தொடர்பிலான தனது நிலைப்பாட்டை ஏற்கெனவே வெளிப்படுத்திவிட்டார்.

சில வாரங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் முன்னாள் வடமாகாண முதலமைச்சரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரனை வீடு தேடிச்சென்று சந்தித்த ஜனாதிபதியிடம் 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தப் போவதாக பிரேமதாச மேதினத்தில் அறிவித்தது குறித்து சுட்டிக் காட்டப்பட்டது. பொலிஸ், காணி அதிகாரங்களுடன் அந்த திருத்தத்தை நடைமுறைப்படுத்த முடியுமா என்று பிரேமதாசவிடம் கேட்குமாறு விக்னேஸ்வரனிடம் ஜனாதிபதி கேட்டுக் கொண்டார்.

கடந்த வருடம் ஜனாதிபதியின் அறிவிப்பை அடுத்து 13 வது திருத்தத்துக்கு எதிராக தென்னிலங்கையில் கிளம்பிய எதிர்ப்பின் காரணமாக ஜனாதிபதி தேர்தலின்போது எந்தவொரு பிரதான வேட்பாளரும் தேசிய இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வு குறித்து தங்களது தேர்தல் விஞ்ஞாபனங்களில் பகிரங்கமாக கூறுவது சாத்தியமில்லை என்றே பொதுவில் நம்பப்பட்டது. ஆனால், சஜித்தும் அநுராகுமாரவும் தங்களது தற்போதைய நிலைப்பாடுகளை தேர்தல் விஞ்ஞாபனங்களில் குறிப்பிடுவதை இனி மேல் தவிர்க்க முடியாது.

இருவரினதும் யாழ்நகர் அறிவிப்பு தொடர்பில் தென்னிலங்கையில் சிங்கள தேசியவாத சக்திகளிடம் இருந்து கிளம்பக்கூடிய எதிர்ப்புகளுக்கு மத்தியில் அவர்கள் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்பது முக்கியமான கேள்வி.


சஜித் யாழில் இருந்து கொழும்பு திரும்புவதற்கு முன்னதாகவே பிவிதுறு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில அவர் மீது கடுமையான விமர்சனத்தை முன்வைத்தார்.

இந்தியாவினால் திணிக்கப்பட்ட 13 வது திருத்தத்தின் பிரகாரம் மாகாணங்களுக்கு பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்குவதன் மூலம் ஏற்படக்கூடிய விளைவுகளை சஜித் நன்றாக புரிந்து கொண்டிருந்தால் யாழ்ப்பாணத்தில் அந்த உறுதிமொழியை வழங்கியிருக்கமாட்டார் என்று கூறிய கம்மன்பில, கடந்த 37 வருடங்களில்

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி-7 உறுப்பினராக இல்லாத போதும் இந்தியா தொடர்ந்து மாநாட்டுக்கு அழைக்கப்படுவது ஏன்?



ஜி-7 உச்சி மாநாடு இத்தாலி நாட்டில் புகலியாவில் ஜூன் 13-ஆம் தேதி முதல் ஜூன் 15-ஆம் தேதி வரை நடைபெற்றிருக்கிறது.

உலகம் நெருக்கடியான சூழலில் இருக்கும் இந்நிலையில் இந்த மாநாடு நடைபெறுகிறது. காஸாவிலும் உக்ரேனிலும் போர் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. பல ஜி-7 நாடுகள் உள்நாட்டு பிரச்னைகளைச் சந்தித்து வருகின்றன. அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்சிஸ் தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

இந்த மாநாட்டில் கலந்துகொள்ள பிரதமர் நரேந்திர மோடி, இத்தாலி சென்றுள்ளார். பிரதமராக மூன்றாம் முறை தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அவரது முதல் வெளிநாட்டு பயணம் இதுவாகும்.

2020-ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடக்கவிருந்த ஜி-7 உச்சி மாநாட்டுக்கு இந்தியா அழைக்கப்பட்டிருந்தது. ஆனால் கொரோனா பெருந்தொற்று காரணமாக அந்த மாநாடு ரத்து செய்யப்பட்டது.

2023-ஆம் ஆண்டு ஜப்பான் நாட்டின் ஹிரோஷிமாவில் ஜி-7 உச்சி மாநாடு நடைபெற்ற போது இந்தியாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. பிரதமர் நரேந்திர மோடி அந்த மாநாட்டில் பங்கேற்றார். 2019-ஆம் ஆண்டிலும் இந்தியா ஜி-7 மாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருந்தது.


இந்த ஆண்டும் இந்தியா உட்பட ஜி-7 நாடுகளில் அங்கம் வகிக்காத பல நாடுகள் மாநாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளன.

**ஜி-7க்கு இந்தியா ஏன் முக்கியம்?**

இந்தியாவுடன் உறவாடுவது ஜி-7 நாடுகளுக்கு முக்கியமாகும். இந்தியாவின் உள்நாட்டு உற்பத்தி மதிப்பு 2.66 ட்ரியல்லன் டாலர். இந்தியப் பொருளாதாரம் பிரான்ஸ், இத்தாலி மற்றும் கனடா ஆகிய மூன்று ஜி-7 நாடுகளின் பொருளாதாரத்தை விடப் பெரியது. உலகின் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் இந்தியாவும் ஒன்று என்று சர்வதேச நிதியம் கூறுகிறது. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மேற்கத்திய நாடுகளின் வளர்ச்சியை விட வித்தியாசமானது. பெரும்பாலான மேற்கத்திய நாடுகளில் வளர்ச்சி சீரானதாக இருக்கும், ஆனால் இந்தியாவில் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் மிக அதிகம்.

சர்வதேச நிதியத்தின் ஆசிய பசிபிக் துணை இயக்குநர் ஆன் மேரி குல்ட் - வுல்ஃப், உலகுக்கு பொருளாதார உந்து சக்தியாக இந்தியா இருக்கும் என்று கடந்த ஆண்டு தெரிவித்தார். முதலீடு, தொழில், மற்றும் நுகர்தல் மூலம் உலக பொருளாதார வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லக் கூடியது என்றார்.

உலகில் உள்ள பல நாடுகளில், முதலீட்டாளர்கள் இந்தியாவையே விரும்புகின்றனர். ஏனென்றால், சந்தை திறன், குறைந்த



செலவுகள், தொழில்துறைக்கு ஏதுவான சூழல் இந்தியாவில் உள்ளன.

மக்கள் தொகையில் சீனாவை பின்னுக்கு தள்ளியுள்ளது இந்தியா. நாட்டின் 68 வீத மக்கள்தொகை வேலை பார்க்கும் வயதினராக (15 வயது முதல் 64 வயது வரை) உள்ளனர். மேலும் 65 வீத மக்கள் 35 வயதுக்கும் கீழானவர்களாக உள்ளனர். இந்தியாவில் இளம், திறன்மிக்க, ஓரளவு திறன்மிக்க மக்கள் அதிகம் பேர் உள்ளனர்.

இரண்டாவது காரணம், அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகள், இந்திய பசிபிக் மண்டலத்தில் தங்கள் நெருக்கத்தை அதிகப்படுத்தும் கொள்கைகளை வகுத்து வருகின்றனர்.

**ஜி7 செல்வாக்கு வரும் ஆண்டுகளில் குறையுமா?**

கடந்த சில ஆண்டுகளில், பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய ஜி-7 ஐரோப்பிய உறுப்பினர்கள், தங்களுக்கான சொந்த இந்திய பசிபிக் உத்திகளை வகுத்துள்ளன. இத்தாலியும் இந்திய பசிபிக் மண்டலத்துடன் நெருக்கமாக இருப்பதற்கான விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளது.

வாஷிங்டனை சேர்ந்த ஒரு ஆய்வுக் குழுவான ஹட்சன் நிறுவனத்தின் ஒரு அறிக்கையின் படி, ஜி7-இன் நிரந்தர அழைப்பாளராக இந்தியா சமீப காலமாக உள்ளது.

ஜி-7 செல்வாக்கு மிகுந்த குழுவாகும். ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சிலின் செல்வாக்கு குறைந்து வரும் நேரத்தில், ஜி-7 மேலும் முக்கியத்துவம் பெறுகிறது.

சீன-ரஷ்யா மற்றும் அமெரிக்காவுக்கு இடையே உறவுகள் மோசமாகி வரும் நிலையில், ஐக்கிய நாடுகள் ப்பாதுகாப்பு கவுன்சில், எந்த வித தீர்க்கமான முடிவுகளையும் எடுக்கும் வலிமை கொண்டதாக இல்லை.

ரஷ்ய-உக்ரேன் போர் குறித்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சிலை விடக் கடுமையான நிலைப்பாட்டை ஜி-7 ரஷ்யாவுக்கு எதிராக எடுத்தது.

எனினும் ஜி7-இன் செல்வாக்கு கடந்த சில ஆண்டுகளில் குறைந்துள்ளது என்பதையும் கவனிக்க வேண்டும். இதற்கு ஒரு காரணம், 1980-களில் ஜி-7 நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, உலகின் ஒட்டுமொத்த உற்பத்தியில் 60 வீதமாக இருந்தது. இப்போது அது 40 வீதமாக குறைந்துள்ளது.

ஹட்சன் நிறுவன அறிக்கை, ஜி7-இன் செல்வாக்கு வரும் ஆண்டுகளில் குறையும் என்று கணிக்கிறது. அப்படியான சூழலில், ஜி-7 நாடுகளின் புதிய உறுப்பினராக இந்தியா இருக்கலாம். இந்தியா ஜி-7 உறுப்பினராகலாம் என்று உலகின் பல்வேறு அரசியல் நிபுணர்களும் கணித்து வருகின்றனர். பாதுகாப்புத்துறைக்கான பட்ஜெட்டில் உலகின் மூன்றாவது இடத்தில் இருப்பது இந்தியாவுக்கு சாதகமாக பார்க்கப்படுகிறது.

இந்தியாவின் உள்நாட்டு உற்பத்தி பிரிட்டனுக்கு சமமாக உள்ளது. மேலும் இந்தியா ஒரு ஜனநாயக நாடு என்பதால், இந்தியாவுடன் உரையாட ஜி-7 நாடுகள் அழைப்பு விடுக்கின்றன.

**ஜி-7 என்றால் என்ன?**

ஜி-7 என்பது 'ஏழு பேர் கொண்ட குழு' என்று அர்த்தம். உலக வர்த்தகம் மற்றும் சர்வதேச நிதி அமைப்புகள் மீது தாக்கம் செலுத்தும் உலகின் மிகவும் முன்னேறிய ஏழு நாடுகளின் கூட்டமைப்புதான் ஜி-7.

கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகியவையே அந்த ஏழு நாடுகள்.

1998-இல் ரஷ்யாவும் இந்த குழுவில் சேர்க்கப்பட்டிருந்தது. அப்போது இந்த குழு ஜி8 நாடுகள் என்று அழைக்கப்பட்டது. ஆனால், 2014-ஆம் ஆண்டு க்ரிமியாவின் ஆக்கிரமிப்புக்கு பிறகு, ரஷ்யா வெளியேற்றப்பட்டது.

உலகின் பெரிய பொருளாதார நாடுகளில் ஒன்றாகவும், உலகின் மக்கள் தொகை அதிகம் கொண்ட இரண்டாவது பெரிய நாடாகவும் இருந்த போதிலும், சீனா எப்போதும் இந்த குழுவின் உறுப்பினராக இருந்ததில்லை.

சீனாவில் தனிநபர் வருமானம் ஜி-7 நாடுகளை விட குறைவாக இருப்பதால், சீனா முன்னேறிய நாடாக கருதப்படுவதில்லை. எனினும், சீனாவும் பிற நாடுகளும் ஜி-20 குழுவின் உறுப்பினர்களாக உள்ளனர்.


ஐரோப்பிய ஒன்றியமும் ஜி7-இல் அங்கம் வகிக்கவில்லை. ஆனால் அதன் அதிகாரிகள் ஜி-7 மாநாடுகளில் ஆண்டுதோறும் பங்கேற்கின்றனர்.

ஆண்டு முழுவதுமே ஜி-7 நாடுகளின் அமைச்சர்களும் அதிகாரிகளும் சந்தித்துக் கொண்டு, ஒப்பந்தங்கள் கையெழுத்திட்டு, சர்வதேச நிகழ்வுகள் குறித்து கூட்டறிக்கை வெளியிடுகின்றனர்.

**வளரும் நாடுகளுடன் ஜி-7 எப்படி இயங்குகிறது?**

ஜி-7 மாநாட்டின் முக்கிய நோக்கமாக, வளர்ந்த நாடுகள் மற்றும் வளரும் நாடுகளுடனான உறவுகள் இருக்கும் என்று இத்தாலி கூறுகிறது. நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு மற்றும் அனைத்து தரப்பினருக்கும் பலனளிக்கும் வகையிலான உறவுகளாக அவை இருக்கும் என்றும் கூறியது.

ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா மற்றும் இந்திய பசிபிக் மண்டலத்திலிருந்து 12 நாடுகளை இத்தாலி ஜி-7 மாநாட்டுக்கு அழைத்துள்ளது. ஜியார்ஜியா மெலோனி அரசின் 'மட்டேய் திட்டத்தின்' கீழ் இத்தாலி பல ஆப்பிரிக்க நாடுகளுக்கு 5.5 பில்லியன் டாலர் மதிப்புள்ள நிதியுவி மற்றும் கடன் வழங்கப் போகிறது. ஆப்பிரிக்க நாடுகளின் பொருளாதாரத்தை



முன்னேற்றுவதே இத்தாலியின் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பா இடையே, எரிவாயு மற்றும் ஹைட்ரஜன் குழாய்களை கட்டி எரிசக்தித் துறையில் முக்கிய நாடாக தன்னை நிலை நிறுத்திக் கொள்ள இத்தாலிக்கு இத்திட்டம் உதவும். எனினும் பல நிபுணர்கள், இத்திட்டத்தின் மூலம் ஆப்பிரிக்காவிலிருந்து இத்தாலிக்கு இடம் பெயர்தலை நிறுத்தப் போகிறது இத்தாலி என்று கூறுகின்றனர்.

பிற நாடுகளையும் இத்திட்டத்துக்கு நிதி பங்களிப்பு வழக்க இத்தாலி கோரியுள்ளது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களதேச வேட்பாளருக்கு வாக்களிக்கப் போட்டி!

# தமிழ்ப் பொதுவேட்பாளரை தோற்கடிக்க சூளுரை!

பனங்காட்டான்

இவ்வருடம் இடம்பெறவுள்ள இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் இதற்கு முன்னையவற்றை விட வேறுபட்டதாகவும், ஒருவகையில் அரசியல் முக்கியத்துவம் பெற்றதாகவும் நோக்கப்படுகிறது.

தேர்தலுக்கான திகதி இன்னமும் அறிவிக்கப்படவில்லை. வேட்புமனுக்கள் தாக்கல் செய்யும் திகதியும் அறிவிக்கப்படவில்லை. ஆனால், தேர்தல் களத்தில் சூடு ஆரம்பித்துள்ளது.

பிரதான வேட்பாளர்களாக ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, அநுர குமார திசநாயக்க ஆகியோர் வெளிப்படுத்தப்பட்டுள்ளனர். மகிந்தவின் பொதுஜன பெரமுன போட்டியிடுவதுபற்றி இதுவரை அறிவிக்கப்படவில்லை. ரணில், சஜித், அநுர ஆகிய மூவரும் கடந்த ஒரு மாதத்துக்குள் வடக்குக்கு விஜயம் மேற்கொண்டு முதலாம் கட்ட பரப்புரையை முடித்துள்ளனர். இதனால் வடக்கில் அரசியல் வெப்ப அலை வீசத் தொடங்கியுள்ளது.

ஜனாதிபதி என்ற பதவி வழியாக அரசின் சில நிகழ்ச்சித் திட்டங்களை நிறைவு செய்பவர் என்ற போர்வையில் ரணில் தமது பயணத்தை மேற்கொண்டார். அவ்வேளை சில பொறிகளையும் புதைத்துவிட்டுச் சென்றார். அரசியல் தீர்வா, அபிவிருத்தியா இன்றைய தேவை என்ற கேள்வியை எழுப்பி தாமே பதிலையும் கூறினார். நாற்பது வயதுக்குட்பட்ட இளைஞர்கள் பொருளாதார நன்மைகளையே வேண்டுவதாகவும் அரசியல் நன்மைகளை கேட்கவில்லை என்றும் இவர் கூறியது தமிழரின் அரசியல் தீர்வுக் கோரிக்கையை திசை திருப்பும் இலக்குக் கொண்டது.

பாடசாலைகளில் திறன் வகுப்புகளை உருவாக்குவதற்கான தமது அன்பளிப்புகளை எடுத்துச் சென்று விநியோகித்த சஜித் பிரேமதாச அவை தமது சொந்த நிதியிலானது என்று தெரிவித்தது முக்கியமானது. இவரது தந்தையார் ரணசிங்க பிரேமதாச மாவட்டங்கள் தோறும் மாதிரிக் கிராமங்களை நிர்மாணித்தார். மகன் சஜித் முன்மாதிரி பாடசாலைகளை உருவாக்கி தமிழர்களின் அரசியல் தீர்வை இரண்டாம் மட்டத்துக்கு கொண்டு செல்ல முனைந்துள்ளார்.

ஜே.வி.பி. என அறிமுகமான தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசநாயக்க வடக்கு விஜயத்தின் போது அரசியல் மட்டுமே பேசினார். பதின்மூன்றாம் திருத்தத்தை நடைமுறையிலுள்ளவாறு செயற்படுத்துவேன் என்று கூறியிருந்தாலும் புதிய அரசியல் அமைப்பின் மூலமே இனப்பிரச்சனைக்கு தீர்வு காண முடியுமென தங்கள் நிலைப்பாட்டை சென்ற இடமெங்கும் வெளிப்படுத்தினார்.

1987ம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும், ராஜிவ் காந்தியும் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் உருவான 13வது திருத்தம் - மாகாண சபை முறைமைகள் பற்றியே இவர்கள் மூவரும் கவனம் செலுத்தினர் என்பதை காணக்கூடியதாக இருந்தது. தமிழர் தரப்பு கேட்டு வரும் சமஷ்டி முறை நிர்வாகம் பற்றி எதுவும் கூறாது இயலுமானவரை தவிர்த்துக் கொண்டனர்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசில் அமைச்சராகவிருந்து முழுமையாக ஆதரவு வழங்கியவர் ரணில் விக்கிரமசிங்க. தமது பெரிய தந்தையார் முறையான ஜே.ஆரின் செல்லப்பிள்ளையாக வளர்க்கப்பட்டவர் இவர். பதின்மூன்றாம் திருத்தத்திலுள்ள காவற்துறை அதிகாரத்தை தர முடியாதென்றும் காணி நிர்வாகத்தை மட்டுமே மாகாண சபைக்கு வழங்க முடியுமென்றும் இப்போது கூறுகிறார்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட போது அதனை முழுமையாக நிராகரித்து, ராஜிவ் காந்தியை சந்திக்கவே மறுத்த அன்றைய பிரதமர் ரணசிங்க பிரேமதாசவே 1990ல் வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாண சபையை கலைத்த பெருமைக்குரியவர். இவரது மகனான சஜித் பிரேமதாச காணி மற்றும் காவற்துறை அதிகாரங்களைக் கொண்ட மாகாண சபையை மக்களின் நம்பிக்கையை வென்றெடுத்து தம்மால் வழங்க முடியுமென்று தமிழ் தலைவர்களிடம் உறுதி கூறியுள்ளார்.

1987 ஒப்பந்த வேளையில் ஜே.வி.பி. என்ன செய்தது என்று சொல்லத் தேவையில்லை. தெற்கில் இரத்த ஆறு ஓடவைத்து தமிழரின் வணிக நிலையங்களை எரித்தும் கொள்ளையடித்தும் படுகொலைகளையும் புரிந்தவர்கள் இவர்கள். மாகாண சபை முறைமையை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளதால் தங்கள் கட்சியும் அதனை ஏற்றுவிட்டதாகக் கூறுகிறார்கள். ஆனால், புதிய அரசியலமைப்பின் மூலமே அரசியல் தீர்வு காண முடியுமென்பது இவர்களது நிலைப்பாடு.

மொத்தத்தில் இவர்கள் மூவரும் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கு எந்த உத்தரவாதமும் கொடுக்கவில்லை. மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்குவதில்கூட நிலையான முடிவை



**பதின்மூன்றாம் திருத்தம் ஒப்பமிடப்பட்டபோது அதனை ஆதரித்த ரணில் இப்போது காவற்துறை அதிகாரம் கிடையாது என்கிறார். பதின்மூன்றாம் திருத்தத்தை முழுமையாக எதிர்த்த அன்றைய பிரதமர் பிரேமதாசவின் மகன் சஜித் முழு அதிகாரங்களையும் தருவேன் என்கிறார். ஒப்பந்தத்தை அன்று எதிர்த்து இனவெறியாட்டம் புரிந்த ஜே.வி.வி.யின் வேட்பாளர் அநுர புதிய அரசியல் அமைப்பே தீர்வு தரும் என்கிறார். யாரைத்தான் நம்புவது?**

இவர்களால் கூற முடியவில்லை. ஏதோ பதின்மூன்றாம் திருத்தத்தை நடைமுறைப்படுத்திவிட்டால்(?) தமிழரை ஏமாற்றிவிடலாமென எண்ணுகிறார்கள் போல் தெரிகிறது.

நல்லாட்சிக் காலத்தில் வடக்கில் ஆயிரம் விகாரைகள் அமைப்பேன் என்று பகிரங்கமாகக் கூறியவர் சஜித் பிரேமதாச. வெடுக்குநாறிமலை போன்ற தமிழரின் வழிபாட்டுத் தலங்களை சிங்கள பௌத்த ஏகாதிபத்தியம் தடை செய்து நிர்மூலமாக்கியபோது அமைதி காத்தவர் இவர். மாகாண சபைகளுக்கு கருமாதி செய்தவர் இவரது தந்தை. ஆனால் இவர் மாகாண சபைகளுக்கு முழு அதிகாரங்களையும் தரப்போவதாகச் சொல்கிறார்.

சஜித் பிரேமதாச இவ்வாறு உறுதி வழங்குவதற்கான வஞ்சக வலையை விரித்தவர் ரணில் விக்கிரமசிங்கவே. அண்மைய யாழ்ப்பாண விஜயத்தின்போது தம்மைச் சந்தித்த தமிழ் தலைவர்களிடம், காவற்துறை அதிகாரத்தையும் தருவதாக சஜித் தெரிவித்தாரா என்பதை அவரிடமே நேரடியாகக் கேட்டு அறிந்துகொள்ளுங்கள் என முடிச்சுப் போட்டவர் ரணில்தான். தேர்தலில் வாக்குகளைப் பெறும் நோக்குடன் சகல அதிகாரங்களையும் தரப்போவதாக கூறிய சஜித்துக்கு அவரது கட்சிக்குள்ளேயே பெரும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இதுதான் ரணில் எதிர்பார்த்தது.


சஜித் கூறிய காவற்துறை என்பது சமூக பொலிஸ், சுற்றாடல் பொலிஸ் என்று விளக்கம் கொடுத்துள்ளார் அவரது கட்சியைச் சேர்ந்த எஸ்.எம்.மரிக்கார். சஜித்தின் கூற்றுத் தொடர்பாக வட்ட மேசை மாநாடு வேண்டுமென கோரியுள்ளார் முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய. பொதுஜன பெரமுனவின் றோகித அபேகுணவர்த்தனவும், இனவாதத்தின் அடையாளமாக விளங்கும் உதய கம்மன்பிலவும் சஜித்தின் கருத்தை வன்மையாக எதிர்த்துள்ளனர். சஜித்துக்கு எதிராக அவரது அலுவலகத்தின் முன்னால் எதிர்ப்புப் பேரணி ஒன்றும் இடம்பெற்றுள்ளது. ரணில் போட்ட விதை சஜித்தின் வளவுக்குள் நன்றாக வளரும்போல் தெரிகிறது.

சஜித் வடக்கில் வழங்கிய உறுதிமொழியில் - மக்களின் நம்பிக்கையை வென்றெடுத்து - என்று கூறியதற்கும், அநுர குமார திசநாயக்க வடக்கில் தெரிவித்த கருத்தில் - தற்போது நடைமுறையிலுள்ளவாறு - மாகாண சபைகளை செயற்படுத்துவேன் என்று கூறியதற்கும் என்ன அர்த்தம் என்பதை புரிந்து கொண்டால் யாரும் மண்டையை உடைக்க வேண்டிய தேவையில்லை.

மக்களின் நம்பிக்கையை வென்றெடுத்து என்பது சிங்கள மக்களின் சம்மதத்தைப் பெற்று என்பதாகும். தற்போது நடைமுறையிலுள்ள என்று அநுர குமார தெரிவித்தது வடக்கும் கிழக்கும் பிரிக்கப்பட்ட மாகாண சபை முறைமையை என்பதாகும். ஆக, இவர்கள் இருவரும் தமிழர்களுக்கு எதையும் மேன்மையானதாகக் கொடுப்பதாக எதுவும் தெரிவிக்கவில்லை.

சிங்களத் தலைவர்களின் அரசியல்போக்கு தொடர்ந்து சுத்துமாத்தாக இருக்க தமிழர் தரப்பினரின் பம்மாத்துகள் அதற்கு இணையாக அரங்கேறுகின்றன. ஈழவர் அரசியலில் தனிஒட்டகமாக கூடாரத்துள் நுழைந்தவரின் செயல்கள் தமிழ் மக்களின் ஒன்றிணைந்த செயற்பாட்டை நிர்மூலமாக்கி தமிழ் தேசியத்தை துடைத்தழிக்கிறது.

ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியான பின்னரே தமிழரசு கட்சி தனது முடிவை எடுக்குமென அதிகாரபூர்வமாக அதன் தலைமை அறிவித்திருக்கையில், இவர் ஒருவர் மட்டும் தமிழர் தரப்பின் பொதுவேட்பாளரை தோற்கடித்தே தீருவேன் என வீர சபதம் எடுத்து சூளுரைத்துள்ளார். ஏற்க முடியாத இவரது செயற்பாடுகளால் இவரை இடைத்தரகர் என்று இப்போது பலரும் அழைக்க ஆரம்பித்துள்ளனர். பொது வாழ்வில் இவ்வாறானவர்களை மாமாக்கள் என்று அழைப்பதுண்டு.



பொதுவேட்பாளர் தொடர்பாகவும் இடைத்தரகர் தொடர்பாகவும் திபாகரன் என்னும் அரசியல் கட்டுரையாளர் அண்மையில் எழுதி தமிழ் இணையம் ஒன்றில் வெளியான நீண்ட கட்டுரையின் இரு பந்திகள் கீழே:

'தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தி அவருக்கு தமிழ் மக்கள் வாக்களிப்பதன் மூலம் சிங்களத் தலைவர்களை ஜனநாயக ரீதியில் வலுவற்றவர்களாக தோற்கடிப்பது, சிங்களத் தலைவர்களின் வெற்றியை மலினப்படுத்துவது, சிங்களத் தலைவர்களின் வெற்றியை சவாலுக்கு உட்படுத்துவது அல்லது அர்த்தமற்றதாக்குவது ஆகியவற்றை செய்து காட்ட முடியும். இவ்வாறு ஒரு தமிழ் பொதுவேட்பாளரின் மூலம் பெறக்கூடிய நன்மைக்கு எதிராக பொதுவேட்பாளரை யாரெல்லாம் எதிர்க்கிறார்களோ, யாரெல்லாம் இதற்கு ஆதரவு அளிக்கவில்லையோ அவர்கள் யார்? உண்மையில் அவர்கள் சிங்கள தேசத்தின் சேவகர்கள், சிங்களத்தின் கையாட்கள், தமிழ் தேசியத்தின் மீது சிங்கள தேசத்தால் செருகப்பட்ட ஆப்புகள் தான் இவர்கள் என்பதையும் இனங்காட்டி தமிழ் மக்களிடையே ஊடுருவி இருக்கின்ற இந்தப் புல்லுருவிகளையும், வேடதாரிகளையும் துரத்தி அடிக்க முடியும்.

தமிழ் மக்கள் ஐக்கியப்பட்டு ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளரை நிறுத்தி தேர்தலில் போட்டியிடுவதன் மூலம் சிங்கள தேசத்தின் தலைவனை தெரிவு செய்வதில் சிக்கலை உருவாக்க வேண்டும். தேர்தலில் போட்டியிடுகின்ற தமிழ் பொதுவேட்பாளருக்கு மட்டும் தமது வாக்கை அளிப்பதன் மூலம் தமிழ் மக்களின் வாக்கை ஒன்று குவித்து பலப்படுத்துவோம். தமிழர்களின் ஒற்றுமையை பலப்படுத்துவோம். தமிழ் தேசியத்தை பலப்படுத்துவோம்".

இதற்குமேல் சொல்வதற்கு என்ன இருக்கிறது? ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு: ஏன் - எப்படி உருப்பெற்றது?



யதீந்திரா

ஜனாதிபதி தேர்தலில், தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதிற்காக சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் பலர் உழைத்து வருகின்றனர். கொள்கையடிப்படையில் உடன்பாடுள்ள தமிழ் தேசிய கட்சிகளும் ஒன்றுபட்டு பயணிக்க முன்வந்துள்ளன. ஆனால் இது தொடர்பில் சாதாரண மக்கள் மத்தியில் இன்னும் நெருப்பு பரவவில்லை. கருத்து மக்களை பற்றிக்கொண்டால் அது ஒரு சக்தியாக உருவெடுக்கும் என்று ஒரு கூற்றுண்டு. அதற்கு ஏற்றவாறான காரியங்கள் நிகழும் போது, நமது மக்கள் தமிழ் பொது வேட்பாளரின் பின்னால் அணிதிரளுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

தமிழ் மக்கள் கொள்கைரீதியான முடிவுகளுக்கு பின்னால்தான் கடந்த 75 வருடங்களாக அணிதிரண்டு வந்திருக்கின்றனர். அவர்கள் நம்பிய அரசியல்வாதிகள் பலர், காலத்திற்கு காலம் தடம் புரண்டிருக்கலாம், மக்களின் நம்பிக்கைக்கு மாறாக நடந்திருக்கலாம் ஆனால் மக்கள் அவர்களின் பொறுப்பை ஒரு போதுமே, தட்டிக் கழித்ததில்லை. எனவே தமிழ் பொது வேட்பாளர் விடயம் மக்களை பற்றிக்கொள்ளுமாக இருந்தால், அவர்கள் நிச்சயம் அதன் பக்கமாகவே ஒன்றுசேர்வார்கள். இந்த விடயத்தில் எவரெல்லாம் தெளிவாக இருக்கின்றனரோ அல்லது, இல்லையோ ஆனால் ஒரு ஒரு தரப்பினர் மட்டும் மிகவும் தெளிவாக இருக்கின்றனர். அவர்கள்தான் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை எதிர்த்து வருகின்றனர். இவ்வாறு எதிர்ப்பவர்கள் இரண்டு அணியினராக செயற்பட்டு வருகின்றனர்.

ஒரு அணியினர் பகிஸ்கரிப்பு என்னும் சுலோகத்துடன் செயற்பட்டுவருகின்றனர். இன்னொரு அணியினர் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு ஒரு கோமாளிக் கூத்து, ஒரு விசப்பரிட்சை என்னும் சொற்களோடு ஆவேசப்படுகின்றனர். அண்மையில் சுமந்திரன் ஆவேசப்பட்டிருந்ததை இந்த பின்புலத்தில்தான் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். இந்தப் பின்னணியில் நோக்கினால் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை வேறுபட்ட காரணங்களை கூறி எதிர்க்கும் இரண்டு தரப்பினரும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களாவர். இரண்டு தரப்பினரதும் இலக்கு ஒன்றுதான் - அதாவது, தமிழ் பொது வேட்பாளர் நிறுத்தப்படுவதை தடுப்பது, ஒரு வேளை நிறுத்தப்பட்டால், அவருக்கு பெரும்பான்மை வாக்குகள் கிடைப்பதை தடுப்பது. இதனை எதிர்த்து நாங்கள் பிரச்சாரம் செய்ய வேண்டும், இலங்கை தமிழரசு கட்சி செய்யும் - என்று சுமந்திரன் ஆவேசப்பட்டதை, இந்த அடிப்படையில்தான் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கை தமிழரசு கட்சி இதுவரையில் அதன் உத்தியோகபூர்வ முடிவை அறிவிக்கவில்லை ஆனால் சுமந்திரனோ, தமிழரசு கட்சி, தமிழ் பொது வேட்பளார் நிலைப்பாட்டை ஆதரிப்பதில்லை என்று முடிவெடுத்துள்ளதாக கூறுகின்றார். ஆனால் தற்போது, மாவை சேனாதிசாரா அவ்வாறான முடிவு எதனையும் கட்சி இன்னும் எடுக்கவில்லை என்று அறிவித்திருக்கின்றார். இதில் யார் கோமாளிக் கூத்தாடுவது, சுமந்திரனா அல்லது மாவை சேனாதிராசாவா? தமிழரசு கட்சியின் தலைவராக, இப்போதும், மாவை சேனாதிராசாதான் இருக்கின்றார் என்றே பரவலாக நம்பப்படுகின்றது.

உண்மையில் சுமந்திரன் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை எதிர்க்க வேண்டியதில்லை. அதற்கு மாறாக அனைவரும் ஆதரித்தால் நானும் ஆதரிக்கின்றேன் என்று அடக்கமாக பதிலளித்திருக்கலாம் ஆனால் சுமந்திரனோ வழக்கம் போல், அனைத்தையும் தீர்மானிப்பவன் நான்தான், எனது கடைக்கண் பார்வையின்றி, இங்கு எதுவும் அசையாது, அசையக் கூடாது, அவ்வாறு நடக்கவும் விடமாட்டேன், என்பது போன்றே நடந்து கொள்கின்றார். ஆனால் சுமந்திரனின் கடந்த கால அரசியல் அணுகுமுறைகளை எடுத்து நோக்கினால், எதிலும் அவர் வெற்றிபெறவில்லை. கடந்த பதினைந்து வருடங்களாக, சுமந்திரனின் அரசியல் தீர்மானங்கள் அனைத்தும் புஸ்வானமாகியிருப்பதற்கு மக்கள் சாட்சியாக இருக்கின்றனர். இந்தக் காலத்தில் எவரது கருத்துக்களையும் சுமந்திரன் பொருட்படுத்தியதில்லை. அனைத்தும் தனக்குத் தெரியுமென்னும் இறுமாப்புடன்தான் நடந்து கொண்டார். அவரது இறுமாப்பிற்கு என்ன நடந்தது என்பதை மக்கள் அறிவர். தமிழரசு கட்சியின் தலைவருக்கான தெரிவில் தோல்வியடைந்த பின்னரும் கூட, சுமந்திரன் எதனையும் கற்றுக்கொண்டதாக தெரியவில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்திலிருந்தான் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு கூர்மையடைந்திருக்கின்றது. 2010இல் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலின் போதும், தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு முன்வைக்கப்பட்டது. இந்த விடயத்தை, அன்றைய சூழலில், மூத்த அரசறிவியல் அறிஞர் மு.திருநாவுக்கரசு அவர்கள் வலியுறுத்தியிருந்தார். உண்மையில் அன்றைய காலம், இந்த விடயத்தை கையிலெடுப்பதற்கு மிகவும் சரியானதொரு தருணமாகவே இருந்தது. யுத்தத் தோல்வி என்பது, ஒரு மக்கள் கூட்டத்தின் அரசியல் நிலைப்பாட்டின் முடிவல்ல - என்பதை ஆணித்தரமாக கூறியிருக்க முடியும். ஒரு வேளை அதனை அப்போதே கூறியிருந்தால், அன்றைய சூழலில் உடனடியாகவே தமிழ் தேசிய அரசியல் ஒரு ஜனநாயக வடிவத்திற்கு மாறியிருக்கும். தேவையற்ற பிளவுகளும் ஏற்பட்டிருக்காது. தமிழ் மக்களும் அரசியல்ரீதியில் சிதறியிருக்கமாட்டார்கள். ஆனால் மு.திருநாவுக்கரசுவின் அரசியல் தீர்க்கதரிசனத்தை உணர்ந்து செயற்படுமளவிற்கு சம்பந்தனுக்கு ஆற்றல் இருந்திருக்கவில்லை. சம்பந்தன் சுமந்திரன் போன்றவர்கள் வெறுமனே சட்டத்தின் வழியாக அரசியலை பார்ப்பவர்கள். பிராந்திய, சர்வதேச அரசியல் மாற்றங்களின் ஊடாக அரசியலை பார்க்கும் ஆற்றலை, அவர்களிடமிருந்து எதிர்பார்க்கவும் முடியாதுதான்.



**ஒரு அரசியல் சமூகத்தின் குரல், சுமந்திரன் போன்றவர்களுக்கு கோமாளிக் கூத்தாக தெரிவதும் கூட பிழையல்ல - ஏனெனில் கடந்த பதினைந்து வருடங்களாக சம்பந்தனும் சுமந்திரனும் மேற்கொண்ட அரசியல் கோமாளித்தனங்கள் மீது ஏற்பட்ட வெறுப்பின் வெளிப்பாடுதான் பலரை, தமிழ் பொது வேட்பாளர் என்னும் நிலைப்பாட்டை நோக்கி ஒன்றுபடுத்தியிருக்கின்றது.**

தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு என்பது ஒரு கோமாளிக் கூத்தல்ல. அதே வேளை, இது ஒரு தவறான விடயமும் அல்ல. தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு என்பது இன்றைய அரசியல் சூழலை கையாளும் ஒரு அரசியல் தந்திரோபாயமாகும். வெறும் வாக்குறுதிகளால் காலத்தை கழிப்பதால், தமிழ் தேசிய இனத்தின் பிரச்சினையை காணமால் போகச் செய்ய முடியாது. அரசியலில் உறுதிகொண்டு பயணிப்போரை வேண்டுமானால் காணமால் போகச் செய்யலாம் - ஆனால் ஒரு இனத்தின் அரசியல் வேட்கையை எந்த அதிகார சக்தியாலும் காவுகொள்ள முடியாது என்னும் செய்தியை உரத்துச் சொல்வதற்காகான ஒரு முயற்சிதான், இந்த தமிழ் பொது வேட்பாளர். ஏனெனில் தமிழ் மக்களோ, தமிழ் மக்களுக்காக பேசாதுவிட்டால், வேறு எவர் பேசுவார்? அழுகின்ற பிள்ளைதான் பால் குடிக்கும் என்று ஒரு கூற்றுண்டு. ஜனநாயக தளத்தில் மக்கள் தங்களின் நிலைப்பாட்டை கூற வேண்டுமாயின் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை விடவும் வேறு என்ன தெரிவுண்டு? எதுமில்லை. வாக்களிப்பு ஒன்றுதான், மக்களின் அரசியல் நிலைப்பாட்டை சொல்லுவதற்கான, ஒரேயொரு ஜனநாயக வடிவமாகும்.

இந்த முயற்சி எங்கிருந்து வந்தது? இதன் பின்னணி என்ன? இதற்கு பின்னால் யார் இருக்கின்றனர்?

கடந்த 15 வருடகால அரசியல் அணுகுமுறைத் தோல்வியின் விளைவிலிருந்துதான் இவ்வாறானதொரு முயற்சி துளிர்விட்டது. சம்பந்தன் மற்றும் சுமந்திரனது தவறான, தூரநோக்கற்ற, அரசியலை சூழ்நிலையில் நிறுத்துப் பார்க்கத் தெரியாத, அணுகுமுறைகளே இவ்வாறானதொரு கோரிக்கையை கையிலெடுக்க வேண்டிய அரசியல் சூழலை தோற்றுவித்திருக்கின்றது.

கடந்த பதினைந்து வருடகாலமாக - எவரெல்லாம், அரசியலில் மாற்றங்களை வேண்டி, எழுதியும் பேசியும் ஒன்றுகூடியும் வந்தார்களோ, அவர்கள்தான் இதற்கு பின்னால் இருக்கின்றனர். அவர்களே தற்போது, தமிழ் பொது வேட்பாளரை வெற்றிபெறச் செய்வதற்காக உழைக்கும் அரசியல் சமூகமாக ஒன்றுதிரண்டிருக்கின்றனர். இதில் பல அமைப்புக்களும் தனிநபர்களும் அணிதிரண்டிருக்கின்றனர். அவ்வாறானவர்கள் மத்தியில் அரசியலை கையாளுவது தொடர்பிலும், தந்திரோபாயங்களின் முக்கியத்துவத்தை அறிந்து அணுகுவதிலும், மாறுபட்ட அபிப்பிராயங்கள் இருக்கலாம் - ஆனால், தமிழ் மக்கள் தங்களை தாங்களே தீர்மானித்து, சுயகௌரவத்துடன் வாழ வேண்டும், அதற்காக நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்பதில், எவருக்குமிடையில் மாறுபாடுகள் இல்லை. அதே போன்றுதான், காலப் பொருத்தம் கருதிய முடிவுகளில், ஒன்றிணைவதில் எப்போதுமே முன்நிற்கும் அனைத்து தமிழ் தேசிய கட்சிகளும் இந்த விடயத்தில் ஒன்றுபட்டு நிற்கின்றன. இது அனைவரும் கூடி இழுக்க வேண்டிய தேராகும்.

இந்த முயற்சியைத்தான் சுமந்திரன் கோமாளிக் கூத்து என்கின்றார். ஒரு அரசியல் சமூகத்தின் குரல், சுமந்திரன் போன்றவர்களுக்கு கோமாளிக் கூத்தாக தெரிவதும் கூட பிழையல்ல - ஏனெனில் கடந்த பதினைந்து வருடங்களாக சம்பந்தனும் சுமந்திரனும் மேற்கொண்ட அரசியல் கோமாளித்தனங்கள் மீது ஏற்பட்ட வெறுப்பின் வெளிப்பாடுதான் பலரை, தமிழ் பொது வேட்பாளர் என்னும் நிலைப்பாட்டை நோக்கி ஒன்றுபடுத்தியிருக்கின்றது. சுமந்திரன் போன்றவர்களின் அதிகார மற்றும் பணபலத்திற்கு முன்னால், அதே போன்று, சைக்கிள் அணியினரின் பணபலம் மற்றும் சதிப் பிரச்சாரங்களினால், ஒரு வேளை இந்த முயற்சி தோற்கடிக்கப்படலாம் ஆனால் கருத்து மக்களை பற்றிக்கொண்டால், அது ஒரு சக்தியாக உருவெடுக்கும் என்பதில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் பதற்றமடையமாட்டார்கள்.

ஒரு வேளை தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு தோல்வியடையுமானால் - அது, உண்மையில் இந்த நிலைப்பாட்டின் தோல்வி அல்ல. மாறாக, தமிழ் மக்களின் தோல்வியாகவே பார்க்கப்படும். ஏனெனில் இது வெற்றி தோல்வி தொடர்பான பிரச்சினையில்லை. ஏனெனில் இது வெற்றிபெறுவதற்கான தேர்தலும் இல்லை. இது ஒரு நிலைப்பாட்டை ஒரு குரலில் சொல்வதற்கான தேர்தல். ஒரு புறம் தமிழ் பொது வேட்பாளர் - இன்னொரு புறம், தென்னிலங்கை கட்சிகளை சேர்ந்த வேட்பாளர்கள். இதில் தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்க முடியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோமாளிகளைக் கண்டு அச்சப்படுகிறார்களா கதாநாயகர்கள்?

கந்தையா அருந்தவபாலன்

கூத்து, நாடகம், திரைப்படம், வட்டரங்கு (circus) மற்றும் சிலவகையான களியாட்ட நிகழ்வுகளில் பிரதான கதைக்கோஅல்லது நிகழ்ச்சிக்கோ அதிகம் தொடர்பற்ற வகையில் அவையோரை மகிழ்ச்சிப்படுத்துவதைப் பிரதான நோக்கமாகக் கொண்டு பல்வேறு வேடிக்கையான ஒப்பனைகளுடன் தோற்றம், உடலசைவுகள், பேச்சு என்பவற்றின் மூலம் நகைச்சுவை உணர்வை வாரி வழங்கும் ஒரு நபர் கோமாளி என்று குறிப்பிடப்படுகிறார். எல்லாச் சமூகங்களிலும் வரலாற்றுக் காலம் தொடக்கம் இன்று வரை சில கலை வடிவங்களில் இக்கோமாளி இருந்தே வருகிறார். மானிட வரலாற்றில் மிகப்பழமையான கோமாளி எச்சங்கள் கி.மு 2400 அளவில் பண்டைய எகிப்திய பண்பாட்டில் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது. நவீன கோமாளிப் பாத்திரங்களை உருவாக்கியவர்களில் ஜோசப் கிரிமால்டி(Joseph Girimaldi) முக்கியமானவராக உள்ளார். சேக்ஷபியரின் புகழ்பெற்ற நாடகங்களிலும் இப்பாத்திரத்தைக் காணலாம். இதேபோல தமிழ்க் கூத்து, நாடகங்களிலும் இவரைக் காணமுடியும். தமிழ்த்திரைப்படங்களில் வரும் பல நகைச்சுவைப் பாத்திரங்களும் ஒருவகையில் விருத்தி செய்யப்பட்ட கோமாளிகள்தான். கூத்து, நாடகம், திரைப்படங்களில் மட்டுமன்றி நடைமுறை வாழ்விலும் பல கோமாளிகளை அன்றாடம் காணமுடியும். அரசியலிலும் கோமாளிகள் பலர் இருப்பதாக சொல்லப்படுகிறது. தமிழ்நாட்டில் சுப்பிரமணிய சுவாமியையும் தென்னிலங்கையில் மேர்வின் சில்வாவையும் அவ்வாறு சிலர் கருதுவதுண்டு. இது அவரவர் பார்வையைப் பொறுத்தது. சிலருக்குக் கோமாளியாகத் தெரிபவர் பலருக்குக் கதாநாயகர்களாகவோ அல்லது சிலருக்குக் கதாநாயகர்களாக இருப்பவர் பலருக்குக் கோமாளியாகவும் தென்படலாம். அதேபோல பராட்டா சூரி, கருடன் சூரியாக மாறியது போல கோமாளியும் கதாநாயகனாக மாறலாம்.

கோமாளிப் பாத்திரத்துக்கும் பிரதான கதைக்கும் எவ்வாறு அதிகளவு தொடர்பிருக்காதோ அதேபோலத்தான் இக்கட்டுரைக்கும் மேலேதரப்பட்ட முன்னுரைக்கும் அதிகளவு தொடர்பில்லை என்றாலும் குறிப்பிட்ட ஒரு செயற்பாடு கோமாளிக்கூத்தா இல்லையா என்பதை புரிந்து கொள்ள அது உதவும். இப்போது தமிழ் அரசியல் பரப்பில் பேசுபொருளாக இருப்பது மட்டுமன்றி தென்னிலங்கை அரசியல் தலைவர்களாலும் உச்சரிக்கப்படும் ஒன்றாக தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம் இருந்து வருகிறது. இதனை வடக்கு கிழக்கு குடிசார் பொது அமைப்புகள் முன்னெடுத்து வருகின்றன. மெதுவாக ஆனால் உறுதியாக இதனை நிறுவனப்படுத்தி முன்னேற்றப்பாதையில் அவர்கள் கொண்டு செல்வதை அவர்கள் அண்மையில் உருவாக்கிய பொதுக் கட்டமைப்பு மற்றும் துணைக்குழுக்களின் உருவாக்கம் புலப்படுத்தி நிற்கிறது. அது மட்டுமன்றி தமிழ்ப் பொது வேட்பாளரை எதிர்க்கும் சுமந்திரன் தலைமையிலான ஒரு தரப்பினர் மேற்கொண்டுவரும் எதிர்வினையாற்றல்களும் செறிவடைந்து வருவதைக் காணமுடிகிறது. அவ்வாறு எதிர்வினைகள் செறிவடைவதுகூட தமிழ் பொது வேட்பாளர் தரப்பு முன்னேறி வருகிறது என்பதை எடுத்துக் காட்டுவதாகக் கருதலாம். அவ்வாறான ஒரு முக்கியமான நிகழ்வு அண்மையில் அத்தரப்பினரால் யாழ். மத்திய கல்லூரி தந்தை செல்வா கேட்போர் கூடத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஈழத்தமிழர் சுய நிர்ணய உரிமை - பொது நிலைப்பாடும் பொது வாக்கெடுப்பும் என்ற தலைப்பிலான ஒரு அரசியற் கருத்துக்களமாக அது அறிவிக்கப்பட்டிருந்த போதும் தமிழ் பொது வேட்பாளருக்கு எதிரான பரப்புரையே அக்களத்தின் பிரதான நோக்கமாக இருந்தது. ஆயிரம் பேருக்கு மேல் தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்பப் பட்டிருந்தபோதும் 150 பேர் வரையில் அதில் பங்குபற்றியிருந்தனர். வந்தவர்களில் கணிசமானவர்கள் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான ச. சுகிர்தன், கே. சயந்தன் ஆகியோரின் நெருங்கிய ஆதரவாளர்களாவர்.

**குடிசார் பொதுக்கட்டமைப்பு பலமானதாக மாறுவதற்கும் எதிர்கால அரசியலில் அதிகளவு செல்வாக்குச் செலுத்துவதற்கும் வாய்ப்புகள் உள்ளதால் தமது தரகு அரசியலுக்கு அது எங்கே சங்கூதிவிடுமோ என்ற அச்சமே அவர்களை இந்த ஆட்டம் ஆடவைக்கிறது. அவர்கள் கூறும் கோமாளிகள் அவர்களை மகிழ்ச்சிப்படுத்துவதற்குப் பதிலாக அச்சம் கொள்ள வைக்கிறார்கள் என்பதே உண்மையாகும்.**

அழைப்பிதழில் உரைஞர்களாளாகக் குறிப்பிடப்பட்ட பிரமுகர்களில் இருவர் தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவான நிலைப்பாட்டிலிருப்பவர்கள். தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந. சிறிகாந்தா, டான் குழுமத் தலைவர் எஸ்.எஸ். குகநாதன் ஆகியோரே அவ்விருவர். தனிப்பட்ட காரணங்களுக்காக குகநாதன் வருகை தரவில்லை. சிறிகாந்தாவைத் தவிர உரையாற்றிய மற்றவர்கள் எதிர்பார்க்கப்பட்டது போலவே தமிழ் பொது வேட்பாளருக்கு எதிரான கருத்தையே முன்வைத்தனர். ஆனால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் என்ன செய்யவேண்டும் என்பதை அவர்களில் எவரும் வெளிப்படையாகச் சொல்லவில்லை. இந்நிகழ்வைப் பொறுத்து தமிழரசுக் கட்சியின் தேர்தல் போலவே சுமந்திரன் எதிர்பார்த்த முடிவைப் பெற முடியாமல் போய்விட்டது. கட்சித் தலைவர் தேர்தலில் தான் நிச்சயம் வெற்றி பெறுவேன் என்று சுமந்திரன் உறுதியாக நம்பியது போல இக்கூட்ட நிகழ்வும் தமிழ் பொது வேட்பாளருக்கு எதிரான பரப்புரைக்குச் சிறந்த அடித்தளமாக அமையுமென உறுதியாக நம்பியிருந்த போதும் சிறிகாந்தாவின் சிறப்பான பதிற்பேச்சுக் காரணமாக அந்நம்பிக்கையும் வெற்றிபெறவில்லை.

எனினும் இந்நிகழ்வில் சுமந்திரன் பேசும்போது குறிப்பிட்ட சில விடயங்கள் பல்வேறு வாத எதிர்வாதங்களை அரசியலில் தோற்றிவித்துள்ளன. அவற்றுள் ஒன்று தமிழ் பொது வேட்பாளர் என்பது ஒரு கோமாளிக்கூத்து. மற்றது குடிசார் பொது அமைப்புகள் தங்கள் தங்கள் வேலையைப் பார்க்கவேண்டும். அரசியலில் தலையிடத் தேவையில்லை. அதனை அரசியல்வாதியான நாங்கள் பார்த்துக் கொள்வோம். மூன்றாவது தமிழ் பொது வேட்பாளரை எதிர்த்து தமிழரசுக்கட்சி பிரச்சாரம் செய்யும்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டுமென்ற கருத்தியல் ரீதியான முன்மொழிவு 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் காலத்திலிருந்தே தமிழ்த்தேசிய அரசியலில் பேசுபொருளாக இருந்து வருகிறது. 2019 ஆண்டு தேர்தலின் போதும் அதற்கான ஆரம்ப முயற்சிகள் தமிழ் மக்கள் பேரவையினால் எடுக்கப்பட்ட போதும் அது சாத்தியப்படவில்லை. கடந்த பதினைந்து வருடங்களில் மிக மோசமாகச் சீரழிக்கப்பட்டுவிட்ட தமிழ் மக்களின் அரசியல் பலத்தை தமிழ் இனியேனும் தாமதிக்காது பொது வேட்பாளர் என்ற எண்ணக்கருவின்மூலம் மீளக் கட்டி அமைக்க சமூகத்தலைவர்கள் எடுக்கும் முயற்சி எவ்வாறு கோமாளிக் கூத்தாக அமைய முடியும். யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் தமிழ்த்தேசிய அரசியல்வாதிகள் எனத் தம்மைக் கூறிக்கொண்டு தென்னிலங்கைக் கட்சிகளுக்குத் தரகு அரசியல் செய்தவர்கள் தமிழ் மக்களுக்குப் பெற்றுக்கொடுத்தது எதுவுமில்லை. பதிலாக தமிழ்த்தேசியத்தின்பால் ஒன்றுதிரண்டிருந்த மக்களை பல்வேறு கூறுகளாக்கி அவர்களிடையே உள்முரண்பாடுகளை வளர்த்து அம்மக்களின் அரசியல் பலத்தை சிதைத்து அவர்களை அரசியல் அனாதைகள் ஆக்கியது தான் இவர்கள் செய்த மாபெரும் கைங்கரியம். பிரிந்து கிடக்கும் மக்களை தேச உணர்வுடன் ஒன்றுதிரட்டி அவர்களது அரசியல் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கான முன்னெடுப்புகள் இவர்களுக்குக் கோமாளிக்கூத்துகள். அதை முன்னெடுத்து வரும் சமூகத் தலைவர்கள் கோமாளிகள். தொடர்ந்து தமிழ் மக்களைப் பகடைக் காய்களாக்கி தரகு அரசியல் செய்து சுய இலாபம் பெற தாம் முயற்சிப்பது இராஜதந்திரம். அவ்வாறு முயற்சிக்கும் இவர்கள் சாணக்கியர்கள். தமிழ்த் தேசியத்தை கட்டி வளர்க்க முயற்சிப்பவர்கள் கோமாளிகளா? அதைச் சிதைக்க முனைபவர்கள் கோமாளிகளா?

சமூகத்தலைவர்கள் அரசியல் பேசக் கூடாதா? அது அரசியல்வாதிகளின் தனியுரிமையா? இந்த அரசியல்வாதிகள் எங்கிருந்து வந்தார்கள்? வானத்திலிருந்து வந்த தேவதூதர்களா? சமூகக் குழுக்களிலிருந்துதானே அரசியல் பரிணாம வளர்ச்சி பெற்றது. ஜனநாயக நாடொன்றில் அரசியல் இறைமை என்பது மக்களிடமே உள்ளது. அரசியல் தலைவர்கள் என்பவர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள்தானே. அத்தெரிவு என்பது மக்களுக்கும் தலைவருக்கும் இடையிலான ஒரு மறைமுக ஒப்பந்தமே. எங்கள் நலனுக்காக எங்கள் சார்பாக நீ செயற்படவேண்டும் என்பதே அந்த ஒப்பந்த வாசகம். அந்தவகையில் மக்கள் பிரதிநிதி என்பவர் ஒரு ஒப்பந்தகாரர் மட்டுமே. ஒப்பந்த வாசகங்களை ஒப்பந்தகாரர் மீறும்போது அவ்வொப்பந்தத்தை முறித்துக் கொள்வது சட்ட ரீதியானது என்பது சட்டம் படித்த அரசியல் தலைவர்களுக்குத் தெரியாதது ஒன்றல்லவே. அரசியல் தலைவர்கள்தான் அரசியல் பேசவேண்டும் மக்கள் அதைப் பேசக்கூடாது என்றால் கோதாபய ராஜபக்ஷ என்பவர் அவரைத் தெரிவு செய்த மக்களாலேயே ஏன் விரட்டி அடிக்கப்பட்டார்? வாக்குகளை யாசிக்கும்போது கதாநாயகர்களாகத் தெரியும் மக்கள் அதன்பின் கோமாளிகளாகத் தெரிகிறார்களா? யுத்தத்திற்குப் பின்னரான காலத்தில் இந்த அரசியல் தலைவர்கள் மக்களுக்கான அரசியலை நேர்மையான வழியில் முன்னெடுத்திருந்தால் குடிசார் பொதுக்கட்டமைப்பு மக்களுக்கான அரசியலை முன்னெடுக்க வேண்டிய தேவை ஒன்று எழுந்திருக்காதே.

அடுத்த விடயம் தமிழ் வேட்பாளரை எதிர்த்து தமிழரசுக்கட்சி பரப்புரை செய்யுமென்பது. மே மாதம் 19ஆம் திகதி வவுனியாவில் நடைபெற்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் செயற்குழுக்கூட்டத்தின் முடிவில் அக்கட்சிக்குப் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட சிறிதரன் அவர்களால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ அறிக்கையின்படி தமிழ் பொது வேட்பாளர் தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்றும் பின்னர் ஏனையவர்களுடன் கலந்தாலோசித்து இறுதி முடிவு எடுக்கப்படும் என்றே சொல்லப்பட்டது. அவ்வாறு இருக்கையில் தமிழரசுக்கட்சி எதிர்த்துப் பரப்புரை செய்யும் என்று சுமந்திரன் பகிரங்கமாக எவ்வாறு சொல்லமுடியும்? அதுமட்டுமன்றி வேறு வேறு சந்தர்ப்பங்களிலும் தமிழரசுக்கட்சி பொது வேட்பாளரை எதிர்ப்பதாக முடிவெடுத்துவிட்டது என சுமந்திரன் தெரிவித்து வருகிறார். இதேவேளை சிறிதரன் அவ்வாறு எந்த முடிவையும் கட்சி இதுவரை எடுக்கவில்லை என வெளிநாட்டில் ஊடகங்களுக்குத் தெரிவிக்கின்றார். இதில் எது உண்மை? இதில் வேடிக்கை என்னவெனில் சுமந்திரன் அவ்வாறு மேடையில் கூறும்போது அக்கட்சியின் தற்போதைய தலைவர் மாவை சேனாதிராசா அவ்வரங்கத்தின் முன்வரிசையில் அமர்ந்திருக்கிறார். அச்சந்தர்பத்திலும் அவர் அதனை மறுக்கவில்லை. அதன்பின்னரும் அதனை மறுத்து கருத்து எதுவும் வெளியிடவில்லை. இவ்வாறு சுமந்திரன், சம்பந்தன் போற்றோரின் தன்னிச்சையான முடிவுகளும் கட்சிக்குக் கட்டுப்படாத செயற்பாடுகளும், இவை எல்லாவற்றையும் தற்போதைய கட்சித் தலைவர் கண்டும் காணாமல் விட்டமையுமே இன்று கட்சியை நீதிமன்ற வாசலில் தவம் கிடக்கச் செய்துள்ளது என்பதை சம்பந்த பட்ட எவருமே இன்னும் புரிந்து கொள்ள மறுக்கும்போது தமிழர்க்கான நேர்மையான அரசியலை முன்னெடுப்பதற்கு குடிசார் பொது அமைப்புகள் அதாவது சமூக, சமய தலைவர்களும் அறிஞர்களும் பல்கலைக்கழக மாணவ சமூகமும் முனைப்புக் காட்டுவதில் எந்தத்தவறுமில்லையே.

கடந்த காலங்களில் சிவாஜிலிங்கம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட போதும், தற்போது தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேர்தலைப் புறக்கணிக்க கோருகின்ற போதும் எதிர்ப்பு எதனையும் தெரிவிக்காத இத்தரப்புகள் குடிசார் அமைப்புக்களின் தமிழ் பொது வேட்பாளருக்கு மட்டும் கடுமையான எதிர்ப்பு நடவடிக்கைகளை முடுக்கிவிடுவது ஏன்? இதற்கான பதில் தெளிவானது. சமூகத்தின் அடிமட்டத்திலிருந்து உச்சிவரையில் பரவலாக இருக்கின்ற பல்வேறு தரப்பினரும் இணைந்து ஏற்படுத்துக் கொண்ட குடிசார் பொதுக்கட்டமைப்பு பலமானதாக மாறுவதற்கும் எதிர்கால அரசியலில் அதிகளவு செல்வாக்குச் செலுத்துவதற்கும் வாய்ப்புகள் உள்ளதால் தமது தரகு அரசியலுக்கு அது எங்கே சங்கூதிவிடுமோ என்ற அச்சமே அவர்களை இந்த ஆட்டம் ஆடவைக்கிறது. அவர்கள் கூறும் கோமாளிகள் அவர்களை மகிழ்ச்சிப்படுத்துவதற்குப் பதிலாக அச்சம் கொள்ள வைக்கிறார்கள் என்பதே உண்மையாகும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படித்தோம் சொல்கின்றோம்: பெண்களின் தார்மீகக் குரலைப் பேசும் அன்னலட்சுமி இராஜதுரை சிறுகதைகள்!

**முருகபூபதி**

உலகநாடுகள் அனைத்திலும் குடிசன மதிப்பீட்டைப் பார்த்தால், அதில் பெண்களின் எண்ணிக்கைதான் அதிகம்! பெண்களுக்கு ஆயுளும் அதிகம்.

எனினும், தேர்தல்களில் பெண்களுக்கான வாக்குரிமை காலம் கடந்துதான் கிடைத்தது. பின்னாளில் இலங்கை, இந்தியா, இங்கிலாந்து, இஸ்ரேல், பிலிப்பைன்ஸ், பர்மா, அவுஸ்திரேலியா, பாக்கிஸ்தான், பங்களாதேஷ் முதலான நாடுகளில் பெண்கள் ஆட்சி அதிகாரமும் பெற்றனர்.

பொதுமக்கள் பயணிக்கும் பேரூந்து, ரயில், விமானம் முதலானவற்றை இயக்கி , செலுத்தும் திறனும் பெற்றனர்.

வருடந்தோறும் ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனத்தின் பிரகாரம் ஆண்டுதோறும் மார்ச் மாதம் அனைத்துலக பெண்கள் தினம் கொண்டாடப்படுகிறது.

ஆயினும், பெண்கள் மீதான வன்முறைகள் பல கோணத்தில் முற்றுப்பெறாமல் தொடருகின்றன.

இந்தப்பின்னணிகளுக்கு மத்தியில்தான் இலங்கையில் கடந்த ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக எழுத்துப்பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் மூத்த படைப்பிலக்கியவாதியும் ஊடகவியலாளருமான அன்னலட்சுமி இராஜதுரை அவர்களின் புதிய வரவான " அன்னலட்சுமி இராஜதுரை சிறுகதைகள்" நூல் எமக்கு கிடைத்திருக்கிறது.

300 பக்கங்களைக்கொண்ட இந்த நூலை இலங்கை - இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம் வெளியிட்டுள்ளது.

இந்த அமைப்பின் இலங்கை இணைப்பாளர் தம்பு. சிவசுப்பிரமணியம் பதிப்புரையும் பேராசிரியர் வ. மகேஸ்வரன் முன்னுரையும், கொழும்பு கதைஞர் வட்டத்தைச் சேர்ந்த இலக்கியவாதி வசந்தி தயாபரன் அணிந்துரையும் எழுதியுள்ளனர்.

"மகளிர் சமத்துவம் பேணி நானிலம் தழைக்க உழைத்துவரும் அனைத்து அன்புள்ளங்களுக்கும்" இந்நூலை அன்னலட்சுமி இராஜதுரை சமர்ப்பணம் செய்துள்ளார்.

1958 காலப்பகுதியில் எழுத்தாளர் சிற்பி சரவணபவன் ஆசிரியராகவிருந்து நடத்திய கலைச்செல்வி இலக்கிய இதழில் "யாழ்நங்கை" என்ற புனைபெயரில் எழுதத் தொடங்கிய அன்னலட்சுமி அவர்கள், திருமணத்தின் பின்னர் தமது கணவரின் பெயரையும் இணைத்துக் கொண்டு எழுத்துலகில் பிரபலமடைந்தார்.

1962 ஆம் ஆண்டில் வீரகேசரியில் துணை ஆசிரியராக இணைந்த பின்னரும், சிறுகதை, குறுநாவல், நாவல், கவிதை, கட்டுரை முதலான துறைகளில் தொடர்ந்தும் எழுதினார்.

விழிச்சுடர், ( குறுநாவல் தொகுப்பு ) உள்ளத்தின் கதவுகள் ( நாவல் ) நெருப்பு வெளிச்சம் ( சிறுகதைத் தொகுப்பு ) இருபக்கங்கள் ( கவிதை ) நினைவுப்பெருவெளி - ஒரு பெண் பத்திரிகையாளரின் நினைவுகள் ) ஈழத்தின் இலக்கிய ஆளுமைகள் ( கட்டுரைத் தொகுப்பு ) ஆகிய நூல்களையும் வரவாக்கியிருக்கும் அன்னலட் சுமி இராஜதுரை, வீரகேசரியில் பணியாற்றிய காலத்தில் 'மாணவர் கேசரி' என்னும் பக்கத்தையும் கவனித்தார். வீரகேசரி நிறுவனம் வெளியிட்ட 'ஜோதி' என்ற குடும்ப வார இதழ், மித்திரன் வார மலர் , மற்றும் கலைக்கேசரி மாத இதழ் ஆகியனவற்றிலும் பொறுப்பாசிரியராக பணியாற்றி இளைப்பாறியிருப்பவர்தான் இந்த மூத்த எழுத்தாளர்.

தொடக்கத்தில் சிறுகதைகள் எழுதிக்கொண்டிருந்த அன்னலட்சுமி இராஜதுரையின் படைப்பிலக்கியத்துறையானது அவர் பத்திரிகைச் செய்தியாளராக மாறிய போது சற்று தேக்கம் கண்டிருந்தாலும் பல புதிய படைப்பிலக்கியவாதிகளை தான் பணியாற்றிய ஊடகத்தில் அறிமுகப்படுத்தி அவர்களையும் வளர்த்துவிட்டவர்.

இவரது முதல் கதைத் தொகுதியான நெருப்பு வெளிச்சம் 1984 ஆம் ஆண்டு, அக்காலப்பகுதியில் தமிழ்நாட்டில் வாழ்ந்துகொண்டிருந்த ஈழத்து எழுத்தாளர் காவலூர் ஜெகநாதனின் முயற்சியினால் வெளியானது.

காவலூர் ஜெகநாதன் அக்காலப்பகுதியில் வீரகேசரி வார வெளியீட்டில் தமிழக இலக்கிய மடல் என்ற பத்தி எழுத்தினையும் எழுதிவந்தார்.

அதற்காக அவர் வீரகேசரி அலுவலகத்திற்கு வரும் சமயங்களில் அன்னலட்சுமி இராஜதுரையின் கதைகளை தொகுத்து வெளியிடும் யோசனையை முன்வைத்ததுடன், அதற்கான சகல ஏற்பாடுகளையும் கவனித்தார்.

சென்னையில் நெருப்பு வெளிச்சம் தொகுப்பு அச்சானதும், நூலாசிரியர் அன்னலட்சுமி இராஜதுரையையும் சென்னைக்கு அழைத்து, மூத்த இலக்கிய விமர்சகர் சிட்டி' சுந்தரராஜன் உட்பட பல தமிழக இலக்கிய வாதிகள் முன்னிலையில் வெளியீட்டு அரங்கினையும் நடத்தினார்.

1984 ஆம் ஆண்டு நடந்த இந்த நிகழ்வுகளுக்குப்பின்னர்தான் காவலூர் ஜெகநாதன் தமிழ்நாட்டில் கடத்திச் செல்லப்பட்டு காணாமலாக்கப்பட்டார்.

அதனால் அவர் அன்று வெளியிட்டு வைத்த நெருப்பு வெளிச்சம் தொகுப்பின் பிரதிகள் பலவும் காணாமல் போய்விட்டன. நெருப்பு வெளிச்சம் தொகுப்பு இலங்கை வாசகர்க ளுக்கு அன்று பரவலாகக் கிடைக்கவில்லை.

காவலூர் ஜெகநாதன் மற்றும் குறிப்பிட்ட தொகுப்பின் இழப்பின் துயரத்தையும் அன்னலட்சுமி இராஜதுரை கடந்து வந்திருப்பவர்.

ஏறக்குறைய நான்கு தசாப்த காலங்கள் தனது மனதளவில் இந்தத்துயரத்தை சுமந்துகொண்டிருந்த அன்னலட்சுமி இராஜதுரை அவர்களுக்கு, இலங்கை - இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம் ஆக்கபூர்வமாக உதவியிருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும்.

இந்த நிறுவகம் முன்னின்று வெளியிட்டிருக்கும் அன்னலட்சுமி இராஜதுரை சிறுகதைகள் தொகுப்பினை செம்பதிப்பு எனவும் கூறலாம்.

முன்னர் நெருப்பு வெளிச்சம் தொகுப்பில் இடம்பெற்ற 11 சிறுகதைகளையும், அதன் பின்னர் காலத்துக்குக் காலம் அன்னலட்சுமி இராஜதுரை எழுதியிருக்கும் மேலும் பத்துக்கதைகளையும் சேர்த்து மொத்தம் 21 கதைகளுடன் இந்நூல் வெளிவந்துள்ளது.

அன்னலட்சுமி அவர்கள் ஒரு வெகுஜன ஊடகத்தில் நீண்ட காலம் பணியாற்றியமையால், தான் கற்றதையும் பெற்றதையும், செய்திகளின் ஊடாக அறிந்துகொண்ட தகவல்களையும் மூலமாக வைத்தும் சில சிறுகதைகளை எழுதியிருக்கிறார்.

குறிப்பாக பெண்கள் எதிர்நோக்கிய நெருக்கடிகள், பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள், சாதீய ஏற்றத்தாழ்வுகள், சில வருடங்களுக்கு முன்னர் முழு உலகமும் சந்தித்த கொரோனா பெருந்தொற்றின் அவலம் முதலானவற்றை கருப்பொருளாக வைத்து இச்சிறுகதைகளை எழுதியிருக்கிறார்.

நூலின் என்னுரையில் தனது முதல் கதைத் தொகுப்பினை அண்டை நாட்டில் வெளியிட்டு வைத்த காவலூர் ஜெகநாதனையும் நன்றியோடு நினைவுகூர்ந்துள்ளார்.

ஈழத்து இலக்கிய உலகில் நீண்டகாலமாக பயணித்துக் கொண்டிருக்கும் அன்னலட்சுமி இராஜதுரை அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்.

---




## வியுக்தியார் பதில்கள்

**இரா. இராஜேஸ்கரன்,**
**ஸ்ரேசன் வீதி, வவுனியா.**

**கேள்வி:** 'எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக களமிறங்குவதற்கு நான் தயாராக உள்ளேன்" என்று ஈழத் தமிழர் சுயாட்சி கழகத்தின் செயலாளர் நாயகம் திருமதி அனந்தி சசிதரன் கூறியுள்ள அதே வேளை, தன்னை விடவும் ஆற்றலுள்ள வேறு எவரேனும் நம்பகமானவர் நிறுத்தப்படுவாரானால் அவரை தான் ஆதரிக்கவும் தயாராக இருக்கிறேன் என்றும் கூறியிருக்கிறார். அவர் போட்டியிடுவது பற்றி வியுக்தியார் என்ன நினைக்கிறார் என்று அறியலாமா?

**வியுக்தியார்:** தமிழ் பொது வேட்பாளராக போட்டியிடுவதற்கு அவருக்கு தகுதியிருக்கிறதா என்று கேட்டால் பதில் சொல்லியிருக்கலாம். அவர் சொல்வது பற்றி கேட்கிறீர்கள். எப்படி பதில் சொல்வது? தான் போட்டியிடுவதற்கு தயார் என்று சொல்வதன் மூலம் அவர் இந்த விவகாரத்தை கோமாளித்தனமாக்குவதற்கு முயற்சி செய்கிறார் என்றுதான் வியுக்தியார் நம்பவேண்டியிருக்கின்றது. ஏற்கனவே இதற்கு எதிரானவர்கள் இதுஒரு கோமாளித்தனமான வேலை என்று சொல்லிக்கொண்டிருக்க, அனந்தி போன்றவர்கள் தாங்கள் போட்டியிடத்தயார் என்பதன்மூலம் அவர்கள் சொல்வதை நிஜமாக்கவே முயற்சிக்கிறார்கள் என்றே தெரிகின்றது. அதுசரி, அது என்ன நம்பகரமானவர் நிறுத்தப்படுவாரானால்? இதன் மூலம் அவர் தன்னை ஒரு நம்பகரமானவர் என்கிறார் என்று நினைக்கின்றேன். அவரது 'நம்பகரம்" பற்றி தெரிந்தவர்கள் அமைதியாக இருக்கும்வரை அவர் இப்படிக் கூறிக்கொண்டே இருக்கலாம்.

---

**அ. சிவகணேஸ்,**
**மறவன்புலவு, சாவகச்சேரி.**

**கேள்வி:** சஇந்தியாவின் ஆளும் கட்சியான பாரதிய ஜனதா கட்சி (பா. ஜ. க.) இலங்கை- சிவசேனை அமைப்பின் ஒத்துழைப்புடன் தமிழர் பகுதிகளை சிங்கள - பௌத்த மயமாக்க உதவிகளை வழங்குகிறது என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் தெரிவித்துள்ளாரே. அவர் சொல்வது சரி என்கிறீர்களா?

**வியுக்தியார்:** அவர் எந்த ஆதாரத்துடன் இப்படி சொல்கிறார் என்று அவரிடம்தான் கேட்கவேண்டும். சிவசேனை அமைப்பின் ஒத்துழைப்புடன் சிங்கள பௌத்தமயமாக்கல் நடக்கிறது என்கிறார், அதனை எந்த ஆதாரத்துடன் சொல்கிறார் என்பதும் அவருக்குத்தான் தெரிந்தது. அது வல்ல இந்த வியுக்தியாருக்கு இருக்கின்ற கேள்வி, சீன ஆதரவுடன் நடக்கின்ற எந்த விடயத்தையாவது அவர் இதுவரை கண்டிக்கவில்லையே ஏன்? இந்திய எதிர்ப்பு ஒன்றையே தமிழ் மக்கள் மத்தியில் விதைக்கவேண்டும் என்ற அவர்களது எத்தனிப்புத்தான் பல சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது.

---

**செல்வா. கேசவன்**
**சாங்கிலியன் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியானாலும் இலங்கைத் தீவின் தற்போதைய நிலைமையை மாற்றியமைக்க முடியாது என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளதுடன், பொருளாதாரம் மீளெழ சிறிது காலம் எடுக்கும் என்றும் அதுவரை வீட்டு பொருளாதாரத்தை உரிய முறையில் நிர்வகிக்க வேண்டும் என்றும் ஆலோசனை வேறு கூறுகிறாரே. இதன் அர்த்தம் என்னவென்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?

**வியுக்தியார்:** அது வேறு ஒன்றுமில்லை. ரணிலையே மீண்டும் ஐந்து ஆண்டுகளுக்கு ஜனாதிபதியாக தெரிவுசெய்யுங்கள் என்கிறார் என்று நினைக்கின்றேன். அவர்கள் இன்னமும் ஆட்சியில் அமர தயாராகவில்லையோ என்னவோ? அவர்கள் எப்படியாவது எதிர்க்கட்சியில் அமர்ந்துவிட்டால், தொடர்ந்து அரசியல் செய்வது சுலபம் என்று நினைக்கிறார்கள் என்று தெரிகின்றது. எல்லாவற்றையும் எதிர்த்துக்கொண்டு இருப்பது என்பது சுலபமான வேலை தானே. அதனைத்தான் அவர்கள் செய்ய விரும்புகிறார்கள் என்று தெரிகின்றது. அவர்கள் ஆட்சிக்கு வந்தாலும் நிலைமை மாறாது என்றால், பிறகு எதற்கு அவர்களின் தலைவருக்கு வாக்களிக்கவேண்டும்?. அல்லது நமது தமிழ் அரசு கட்சிக்குள் நடப்பதுபோல அவர்கள் கட்சிக்குள்ளும் ஏதேனும் நடக்கின்றதோ தெரியவில்லையே?

---

**எம். கௌதம்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** தமிழர்களின் தீர்மானமிக்க வாக்குகளுடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றால் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவார். 13 ஆவது திருத்தத்தில் எதிர்க்கட்சித் தலைவரும், ஜனாதிபதியும் ஒரே நிலைப்பாட்டில் உள்ளார்கள். ஆகவே தேசியம் தொடர்பாக பெரும்பான்மையினத்தவர்கள் விசேட கவனம் செலுத்த வேண்டும் என்று விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி எச்சரிக்கை விடுத்திருக்கின்றதே கவனித்தீர்களா?.

**வியுக்தியார்:** அது என்ன சஜித் பிரேமதாசாவும் ஜனாதிபதியும் மட்டுமே பதின்மூன்று விடயத்தில் ஒரே நிலைப்பாட்டில் இருக்கின்றனர் என்கிறார்? அவர்களது பழைய தோழர் அனுரகுமார திசநாயக்காவும் தானே, பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்துவேன் என்கிறார். அவர்கள் பற்றி இவர்கள் வாய்திறக்கவே மாட்டேன் என்கின்றனரே. சிலவேளை அவர்களை நன்கு அறிந்து வைத்திருப்பதால் அப்படி சொல்கிறார்களோ தெரியவில்லை. அதாவது அவர்கள் சொன்னாலும் செய்யமாட்டார்கள் என்பது இருர்களுக்கு தெரிந்திருக்கலாம் அல்லவா. அதுசரி, சஜித்தும் ரணிலும் ஒரே நிலைப்பாடு என்கிறார், ஆனால் சஜித் பொலிஸ் அதிகாரம்- அதாவது சமூக பொலிஸ் அதிகாரத்துடன் அமுல்படுத்துவேன் என்கிறார், ஆனால் ரணில் விக்கிரமசிங்கவோ, பொலிஸ் அதிகாரம் இல்லாமல்தானே அமுல்படுத்துவேன் என்கிறார். இவர் எப்படி இருவரும் ஒரே நிலைப்பாடு என்கிறார் என்பதுதான் இன்னமும் புரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய ஒன்றிய தேர்தலில் தீவிர வலதுசாரிகள் வெற்றி!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

## பிரான்ஸில் இமானுவேல் மேக்ரான் ஆளும் கட்சியும் தோல்வி:

ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் சமீபத்தில் நடந்து முடிந்தது. இத்தேர்தலின் தோல்வி காரணமாக பெல்ஜியம் பிரதமர் அலெக்சாண்டர் ராஜினாமா செய்துள்ளார். அதேபோல் பிரான்சிலும் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் தலைமையிலான ஆளுங்கட்சி ஐரோப்பிய ஒன்றிய தேர்தலில் படுதோல்வியை சந்தித்தது.

பிரான்சில் அவரது மறுமலர்ச்சி கட்சி சுமார் 15 சதவீதம் வாக்குகளை மட்டுமே பெற்று தோல்வி அடைந்ததுள்ளது.

கடந்த வாரம் ஞாயிறன்று (9.6.24) முடிவடைந்த ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத் தேர்தலில் தீவிர வலதுசாரி கட்சிகள் பல இடங்களில் வெற்றி பெற்று ஆதிக்கம் செலுத்தியுள்ளனர்.

இதில் பிரான்ஸ் ஜனாதிபதி மேக்ரான் மிக மோசமான பின்னடைவை எதிர் கொண்டுள்ளார் என்றே தெரிய வருகிறது. ஐரோப்பிய ஒன்றியத்தின் மொத்தமுள்ள 27 நாடுகளில், கடந்த 2019 தேர்தலை விடவும் தீவிர வலதுசாரிகள் பெரும் ஆதிக்கம் செலுத்தியுள்ளதாக தற்போது கூறப்படுகிறது.

குறிப்பாக பிரான்ஸ், இத்தாலி மற்றும் ஆஸ்திரியா நாடுகள் முதலிடத்தை தக்க வைக்க, ஜேர்மனியின் ஏஎவ்டி இரண்டாமிடத்திற்கு வந்துள்ளது. ஐரோப்பாவின் தீவிர வலதுசாரி கட்சிகள் பல இடங்களில் வெற்றி பெற்றுள்ளன.



நெதர்லாந்திலும் தீவிர வலதுசாரிகள் ஆதிக்கம் செலுத்தியுள்ளனர். இந்த நிலையிலேயே, தீவிர வலதுசாரிகளின் வெற்றி ஆபத்தை நோக்கி என்று அரசியல் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இந்த நிலையில் தீவிர வலதுசாரி அமைப்புகளான ஐடி மற்றும் இத்தாலியின் ஈசிஆர் அமைப்பும் ஒன்றிணைந்து ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் பலம் பொருந்திய அமைப்பாக மாறுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

ஈசிஆர் அமைப்பை சேர்ந்த கட்சியே தற்போது இத்தாலியில் ஆட்சியில் உள்ளது. இத்தாலிய தீவிர வலதுசாரி பிரதமர் ஜியோர்ஜியா மெலோனியின் இத்தாலியின் சகோதரர்கள் கட்சி தேர்தலில் முதலிடம் பிடித்துள்ளது.

இனி தீவிர வலதுசாரிகளின் செல்வாக்கு அதிகமாக இருந்தாலும் ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் ஊர்சலா வான் லெயன் (Ursula von der Leyen) மேலும் 5 ஆண்டுகளுக்கு அதே பொறுப்பில் நீடிப்பார் என்றே தெரிய வந்துள்ளது.

மொத்தம் 360 மில்லியன் தகுதியான வாக்காளர்களை கொண்ட இந்த தேர்தலில் வாக்குப்பதிவு 51 சதவீதம் என்றே கூறப்படுகிறது. கடந்த 20 ஆண்டுகளில் இல்லாத உச்சம் இதுவென்றும் கூறப்படுகிறது.

**27 நாடுகளின் ஐரோப்பிய ஒன்றியம்:**


1992ல் நிறுவப்பட்ட ஐரோப்பிய ஒன்றிய உடன்பாட்டை அடுத்து இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. எனினும், 1950கள் முதற்கொண்டே இயங்கி வந்த பல்வேறு முன்னோடி அமைப்புகளின் செயற்பாடுகள், ஐரோப்பிய ஒன்றியத்தை ஒத்து இருந்தன.

ஐரோப்பிய ஒன்றியம் என்பது தற்பொழுது 27 உறுப்பு நாடுகளைக் கொண்ட, நாடு தாண்டிய அரசிடை அமைப்பாகும்.

ஏறத்தாழ 500 மில்லியன் குடிமக்களைக் கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் உலகத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 30 வீதத்தை உருவாக்குகின்றன.

**யூரோ பொது நாணயம்:**

பதினைந்து உறுப்பு நாடுகள் யூரோ எனப்படும் பொதுவான நாணய முறையையும் ஏற்றுக்கொண்டுள்ளன. இது வெளிநாட்டு அலுவல்கள் கொள்கையொன்றையும் உருவாக்கியுள்ளதுடன், உலக வணிக அமைப்பு, ஜி8 உச்சி மாநாடு, ஐக்கிய நாடுகள் அவை என்பவற்றிலும் நிகராண்மைக் கொண்டுள்ளது.




| Group | Seats | % of seats | Change |
|---|---|---|---|
| EPP | 184 | 25.6% | +8 |
| S&D | 139 | 19.3% | 0 |
| Renew | 79 | 11.0% | -22 |
| ECR | 73 | 10.1% | +4 |
| ID | 58 | 8.1% | +9 |
| Greens/EFA | 52 | 7.2% | -19 |
| The Left | 36 | 5.0% | -1 |
| Nonaligned | 99 | 13.8% | +37 |

அத்துடன் 21 ஐரோப்பிய ஒன்றிய நாட்டுகள் 'நேோட்டோ" அமைப்பிலும் உறுப்பு நாடுகளாக உள்ளன. ஐரோப்பிய ஒன்றியத்துக்கு உறுப்பு நாடுகளின் நீதியமைப்பு, உள்நாட்டு அலுவல்கள் ஆகியவற்றிலும் பங்களிப்புகள் உண்டு. செங்கென் ஒப்பந்தத்தின் கீழ் சில உறுப்பு நாடுகளிடையேயான கடவுச்சீட்டுக் கட்டுப்பாட்டு முறையும் ஒழிக்கப்பட்டுள்ளது.



ஐரோப்பிய ஒன்றியம், முடிவுகளை எடுப்பதில் அரசுகளிடையான இணக்கம், அரசுகளுக்கு அப்பாற்பட்டு இயங்கும் அமைப்புக்கள் ஆகியவற்றைக் கொண்ட ஒரு கலப்பு முறையைக் கைக் கொள்கிறது. ஐரோப்பிய ஒன்றியம் ஐரோப்பிய ஆணையம், ஐரோப்பிய நாடாளுமன்றம், ஐரோப்பிய ஒன்றிய அவை, ஐரோப்பிய அவை, ஐரோப்பிய நீதிமன்றம், ஐரோப்பிய மத்திய வங்கி ஆகிய அமைப்புக்களை உள்ளடக்கியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் குடிமக்கள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை ஐரோப்பிய நாடாளுமன்றத்தைத் தெரிவு செய்கின்றனர்.

**பெல்ஜியம் பிரதமர் ராஜினாமா:**

ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற தேர்தலில் தோல்வியடைந்ததால் பெல்ஜியம் பிரதமர் அலெக்சாண்டர் தனது பதவியை ராஜினாமா செய்தார். அதே போல் இந்த தோல்வியை அடுத்து பிரான்சிலும் நாடாளுமன்றத்தை கலைப்பதாக அதிபர் இம்மானுவேல் மேக்ரான் அறிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கான நாடாளுமன்ற தேர்தலில் பிரான்ஸ், பெல்ஜியம் உள்பட 27 நாடுகள் கலந்து கொண்டன. இது இந்தியாவுக்கு அடுத்தபடியாக உலகின் 2-வது மிகப்பெரிய நாடாளுமன்ற தேர்தல் ஆகும். எனவே இந்த தேர்தல் அங்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

இந்த தேர்தலில் பெல்ஜியம் நாட்டின் ஆளுங்கட்சியான பிளெமிஷ் தாராளவாத - ஜனநாயக கட்சி படுதோல்வியை சந்தித்தது. இதில் அந்த கட்சி வெறும் 5.8 சதவீதம் வாக்குகளை மட்டுமே பெற்றுள்ளது.

இந்த தேர்தலில் பிரதமர் அலெக்சாண்டர் டி குரூ தனது கட்சி வேட்பாளரை ஆதரித்து தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வந்தார். எனினும் தேர்தலில் மிக மோசமாக தோல்வியை தழுவியதால் இதற்கு தான் முழு பொறுப்பேற்பதாக அவர் கூறினார்.

மேலும் தேர்தல் தோல்விக்கு பொறுப்பேற்று தனது பிரதமர் பதவியை ராஜினாமா செய்வதாகவும் அவர் அறிவித்தார். அதன்படி பெல்ஜியம் மன்னர் பிலிப்பை சந்தித்து அவர் தனது ராஜினாமா கடிதத்தை வழங்கி உள்ளார். அவர் ஒப்புதல் அளித்தவுடன் பிரதமர் அலெக்சாண்டர் தனது பதவியில் இருந்து விலகுவார் என அங்குள்ள ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

**பிரான்ஸ் இம்மானுவேல் மேக்ரான் ஆளும் கட்சி தோல்வி:**

அதேபோல் பிரான்சிலும் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் தலைமையிலான ஆளுங்கட்சி ஐரோப்பிய ஒன்றிய தேர்தலில் படுதோல்வியை சந்தித்தது. அவரது மறுமலர்ச்சி கட்சி சுமார் 15 சதவீதம் வாக்குகளை பெற்று தோல்வி அடைந்தது.


இதனால் நாடாளுமன்றத்தை கலைத்துவிட்டு புதிய தேர்தலுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார். அதன்படி இந்த மாத இறுதியில் பொதுத்தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.


அடுத்த மாதம் பிரான்ஸ் தலைநகர் பாரீசில் ஒலிம்பிக் போட்டிகள் நடக்க உள்ளன. இந்தநிலையில் அதிபர் இம்மானுவேல் மேக்ரானின் இந்த முடிவு அங்கு பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது என்பதும் உண்மையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாத்தாக பிடித்த காணியில் கனிய மணல் அகழ முயற்சி!

## தடுத்து நிறுத்திய தலைமன்னார் மக்கள்





**தலைமன்னார், ஜூன் 16**

**தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கவயன் குடியிருப்புப் பகுதியில் அடாத்தாகப் பிடித்த காணியில் கனிய மணல் அகழ்வு இடம்பெறவிருந்த நிலையில் நேற்றுச் சனிக்கிழமை காலை 10 மணியளவில் ஒன்று கூடிய அப்பகுதி மக்கள் எதிர்ப்பை வெளியிட்டனர். இதனால் அகழ்வு நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டது.**

தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கவயன் குடியிருப்புப் பகுதியில் சுமார் 160 ஏக்கர் பனை மரங்களைக் கொண்ட இந்தக் காணி சட்ட விரோதமாக பிடிக்கப்பட்டு முள்ளுக்கம்பி வேலி போட்டு காணி அடைக்கப்பட்டுள்ளது.

குறித்த காணி இந்தியத் தனியார் கம்பெனி ஒன்றுக்குக் கனிய மணல் அகழ்வுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாகப் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்த அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த காணியில் உள்ள பல நூற்றுக்கணக்கான பனை மரங்கள் அழிக்கப்பட்டு, கனிய மணல் அகழ்வு இடம்பெற நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்றும் அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதனால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, பாதிக்கப்பட்ட மக்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்துள்ளனர்.

இந்த நிலையில் குறித்த காணிக்குள் சனிக்கிழமை காலை வருகை தந்த சிலர் காணியில் கனிய மணல் அகழ்வில் ஈடுபட நடவடிக்கை எடுத்த நிலையில் அப்பகுதி மக்கள் ஒன்று கூடி எதிர்ப்பை வெளியிட்டனர்.

குறித்த காணியில் என்ன திட்டம் முன்னெடுக்கப் போகிறார்கள் என்ற விடயம் தமக்குத் தெரியாது என்றும் வெளிப்படையாக எமக்குத் தெரிவிக்க வேண்டும் எனவும் அந்த மக்கள் கூறினர்.

மேலும் அப்பகுதிக்குச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மக்களுடன் கலந்துரையாடினார். பின்னர் அடாத்தாகப் பிடிக்கப்பட்ட காணி பகுதிக்குச் சென்று அங்கு பொறுப்பாக இருந்தவருடன் கலந்துரையாடியதுடன், மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றமையால் இவ்விடத்தில் எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்க வேண்டாம் என்றும் மக்களுடன் பிரிதொரு தினத்தில் இவ்விடயம் தொடர்பாகக் கலந்துரையாடி முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இந்த நிலையில் குறித்த காணியில் நின்ற குறித்த நபர் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்காத நிலையில் அங்கிருந்து வெளியேறினார்.

# 10 ஆவது சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு இலங்கையில் 10 நாட்கள் யோகா "மஹோத்சவ்"


*யாழ்ப்பாணம், ஜூன் 16*


10 ஆவது சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு இலங்கையில் பல்வேறு பிரதேசங்களில் 10 நாட்கள் யோகா "மஹோத்சவ்" ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் மற்றும் இலங்கையின் சுற்றுலா அமைச்சு இணைந்து இந்த யோகா "மஹோத்சவ்" வை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த யோகா "மஹோத்சவ்" இலங்கையின் சுற்றுலாத் தலங்களான சிகிரியா, நெடுந்தீவு, மாத்தறை கடற்கரை, காலி கோட்டை, கொழும்பு தேசிய நூதனசாலை, திருகோணமலை ஹெய்சர் விளையாட்டு மைதானம் மற்றும் தொந்தர கலங்கரை விளக்கு உள்ளிட்ட இடங்களில் முன்னெடுக்கப்பட்டன.

(எ)





# சஜித்தும் அநுரா குமாரவும்...

(07ம் பக்கத் தொடர்ச்சி)

பதவியில் இருந்த எட்டு ஜனாதிபதிகளும் (சஜித்தின் தந்தையார் உட்பட) மாகாணங்களுக்கு பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்குவதில் இருக்கும் ஆபத்தை தெளிவாக உணர்ந்த காரணத்தினாலேயே அந்த அதிகாரங்களை ஒருபோதும் நடைமுறைப்படுத்தவில்லை என்று குறிப்பிட்டார்.

தேசிய தேர்தல்கள் நெருங்கும் நேரத்தில் சிங்கள தேசியவாத வாக்காளர்களை தங்கள் பக்கம் வென்றெடுக்கும் நோக்கில் மேலும் பல சிங்கள தேசியவாத அரசியல் கட்சிகளும் சிங்கள பௌத்த அமைப்புக்களும் பிரேமதாசவினதும் திசாநாயக்கவினதும் அறிவிப்புகளுக்கு எதிராக போர்க்கொடி தூக்குவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், அத்தகைய எதிர்ப்புகளையும் மீறி தங்களது நிலைப்பாட்டில் இருவரும் உறுதியாக நிற்பார்களா என்ற சந்தேகம் தமிழ் மக்களுக்கு தாராளமாக இருக்கிறது. ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கடந்த வாரம் செய்தியாளர்கள் மகாநாட்டில் உரையாற்றியபோது மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை முழுமையாக வழங்குவது குறித்து தங்களது தலைவர் யாழ்ப்பாணத்தில் பேசியிருக்கமாட்டார் என்றும் மாகாணங்களுக்கு சமூக மற்றும் சுற்றாடல் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதில் பிரச்சினை இல்லை என்றும் கூறினார்.

இது இவ்வாறிருக்க, சஜித்தின் உறுதிமொழி வழங்கியிருக்கும் சந்தர்ப்பத்தை அனுகூலமாகப் பயன்படுத்த வேண்டும் என்று அரசாங்கத்திடமும் அரசியல் கட்சிகளிடமும் குறிப்பாக தமிழ் அரசியல் கட்சிகளிடம் வேண்டுகோள் விடுத்த சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரான முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய, போரின் முடிவுக்கு பின்னரான பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்பதற்கான வழிவகைகளை ஆராய்வதற்கு வட்டமேசை மகாநாடொன்றைக் கூட்டுமாறும் அரசாங்கத்திடம் கேட்டிருக்கிறார்.

ஜனாதிபதி தேர்தல் நெருங்கும் நிலையில் ஜெயசூரியவின் இந்த நியாயமான வேண்டுகோளை அரசாங்கமோ அல்லது அரசியல் கட்சிகளோ எந்தளவு தூரத்துக்கு கரிசனையுடன் நோக்கும் என்ற கேள்வி எழுகிறது.

ஆனால், மக்கள் செல்வாக்கில் முன்னணியில் நிற்பதாகக் கருதப்படும் இரு பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களும் 13 வது திருத்தம் தொடர்பில் வெளிப்படுத்தியிருக்கும் நேர்மறையான நிலைப்பாடுகள் அதிகாரப் பரவலாக்கத்துக்கு எதிராக சிங்கள மக்கள் மத்தியில் வேரூன்றியிருக்கும் தவறான எண்ணங்களை ஓரளவுக்கேனும் மாற்றுவதற்கு உதவினால் அதுவே பெரிய காரியமாக இருக்கும்.

ஜனாதிபதி விக்கிரமசிங்கவும் சஜித்தும் அநுராகுமாரவும் ஜனாதிபதி தேர்தலில் பிரதான வேட்பாளர்களாக இருக்கப்போகிறார்கள். பிரதான அரசியல் கட்சிகளும் அவற்றின் தலைவர்களும் சிங்கள கடும்போக்கு தேசியவாத சக்திகளின் விசமத்தனமான பிரசாரங்களுக்கு அடிபணியாமல் தங்களது நிலைப்பாடுகளில் உறுதியாக நின்றால் ஜனாதிபதி தேர்தல் பிரசாரம் இனவாத திசைமார்க்கத்தில் செல்வதை நிச்சயமாக தடுக்கமுடியும்.

தென்னிலங்கையில் சிங்கள இனவாத சக்திகள் பலவீனமடைந்திருக்கும் இன்றைய சூழ்நிலையை பயன்படுத்திக்கொள்ளவேண்டியது அவசியம் என்று சஜித்தும் அநுரா குமாரவும் கூறியதாக தமிழரசு கட்சியின் தலைவர்களிடம் இருந்து அறியக்கூடியதாக இருந்தது.

13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக கூறிய உறுதிமொழியை அவர்கள் இருவரும் தங்களது தேர்தல் விஞ்ஞாபனங்களில் குறிப்பிடுவார்களா இல்லையா என்பதைப் பொறுத்தே ஜனாதிபதி தேர்தலில் எத்தகைய நிலைப்பாட்டை எடுப்பது என்பதை தமிழ் அரசியல்வாதிகளால் தீர்மானிக்க முடியும். மறுபுறத்தில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தவேண்டும் என்ற யோசனை தொடர்பில் உறுதியான நிலைப்பாட்டை எடுக்க முடியாமல் பெரும்பாலான தமிழ் அரசியல்வாதிகள் தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள்.

சஜித்தும் அநுரா குமாரவும் தங்களது உறுதிமொழிகளை நிறைவேற்றுவார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. தென்னிலங்கை தலைவர்களின் உறுதிமொழிகள் தொடர்பில் தமிழ் மக்கள் காலங்காலமாக பெற்ற அனுபவங்கள் கசப்பானவை மாத்திரமல்ல, கனதியானவையும் கூட. ஆனால் எதிர்கால அரசாங்கம் ஒன்று 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முன்வரும்போது இவர்கள் இருவரும் அதை எதிர்க்கமுடியாது.

உண்மையிலேயே பிரதான ஜனாதிபதி வேட்பாளர்கள் இன்று தமிழ் மக்கள் மத்தியில் வந்து உறுதிமொழிகளை வழங்குவதை விடவும் தேசிய இனப்பிரச்னையை எவ்வாறு தாங்கள் தீர்க்கப்போகிறார்கள் என்பதை சிங்கள மக்களிடம் கூறுவதே முக்கியமானது என்று பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் யாழ்நகரில் கடந்தவாரம் இடம்பெற்ற அரசியல் கருத்தரங்கில் கூறிய கருத்து மிகவும் வரவேற்கத்தக்கது.

சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளையும் மனக்குறைகளையும் சிங்கள மக்கள் விளங்கிக்கொள்ளக்கூடிய ஆரோக்கியமான அரசியல் சூழ்நிலையை உருவாக்குவதற்கு மூன்று பிரதான ஜனாதிபதி வேட்பாளரும் தங்களை எந்தளவுக்கு அர்ப்பணிப்பார்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்த...

மோடியின் வருகைக்கு முன்கூட்டியே வெளியுறவு அமைச்சரின் வருகை இடம்பெறுவதாக இராஜதந்திர வட்டாரங்களில் அறிய முடிகிறது.

மூன்றாவது முறையாக இந்திய பிரதமராக மோடி பதவியேற்ற நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறப்பு அழைப்பில் கலந்துகொண்டதோடு புதுடில்லியில் எஸ்.ஜெய்சங்கருடன் விசேட கலந்துரையாடலொன்றையும் நடத்தினார்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு மோடி விடுத்த அழைப்பு, அண்டை நாடுகளுடன் இந்தியா நெருக்கமாக பணியாற்ற விரும்புகிறது என்பதை உணர்த்துவதாக வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி கூறினார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அலி சப்ரி செய்தியாளர்களிடம் பேசுகையில்,

"இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இந்த மாதத்தில் ஏதாவது ஒரு நாளில் கொழும்பு வருவார் என்பதை என்னால் உறுதிப்படுத்த முடியும்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, சுற்றுலா, நிலத்தொடர்பு, மின் இணைப்பு, வங்கிகளுக்கு இடையேயான கூட்டாண்மை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருநாடுகளும் பணியாற்றிவரும் பிரதமர் மோடியின் பயணத்திற்கு முன்னதான சில மதிப்பாய்வுகளை செய்ய அவர் இங்கு செய்வார்." என அலி சப்ரி கூறினார்.

அதானி கிரீன் எனர்ஜியின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டம் மற்றும் இந்த ஆண்டின் இறுதியில் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக இந்திய எதிர்ப்பு உணர்வுகள் அதிகரித்து வரும் பின்புலத்தில் எஸ்.ஜெய்சங்கரின் வருகை அமைந்துள்ளது. (அ)

## நாணய...

அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான நான்கு வருட விரிவான நிதியளிப்பு வேலைத்திட்டத்தின் இரண்டாவது மீளாய்வைத் தொடர்ந்து அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அரசாங்க வருவாயை அதிகரிப்பதற்கு இவ்வாறான வரியை அறிமுகப்படுத்துவது மிகவும் முக்கியமானது என சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

2026ஆம் ஆண்டுக்குள் இந்த வரி முறையை முழுமையாக அமுல்படுத்த இலங்கை இலக்கு வைத்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கணக்கிடப்படும் வாடகை வருமான வரி என்பது ஒரு வீட்டின் உரிமையாளர் வீடொன்றை வாடகைக்கு விட்டிருந்தால் அவர் பெறும் வருமானத்தினை மதிப்பீட்டு அதற்கு அறவிடப்படும் வரியாகும்.

இந்த வரி வீட்டின் மதிப்பின் அடிப்படையில் அல்ல, ஆனால் அதன் மூலம் பெறக்கூடிய வருமானத்தின் அடிப்படையிலாகும்.

இந்த வரி முறையை நடைமுறைப்படுத்துவதற்கு உள்ளூராட்சி மட்டத்தில் தரவுக்களஞ்சியம் ஒன்றை நிறுவுவதில் இலங்கை கவனம் செலுத்த வேண்டும் எனவும், நாட்டிலுள்ள சொத்து உரிமையாளர்களுக்குச் சொந்தமான சொத்துக்களின் புதுப்பிக்கப்பட்ட மதிப்பீட்டை தரவுக் களஞ்சியத்தில் உள்ளடக்கியிருக்க வேண்டும் எனவும் சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்திற்குள் தரவுக் களஞ்சியத்தை உருவாக்கும் பணியை முடிக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தால் முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட சொத்து வரி மற்றும் பரிசு மற்றும் பரம்பரை வரி முறையை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டதால், புதிய 'கட்டண வாடகை வருமான வரி'யை அறிமுகப்படுத்த சர்வதேச நாணய நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளது. (அ)

## தேர்தல்...

13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதாக வாக்குறுதி வழங்குகிறார்கள்.

முழு நாட்டுக்கும் இடையூறாக இருந்த விடுதலைப்புலிகள் அமைப்பை இல்லாதொழித்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தை துரிதமாக அபிவிருத்தி செய்தார்.

அரசியலமைப்பின் பிரகாரம், மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டது. தமிழர்கள் தமக்கான பிரதிநிதிகளை தெரிவு செய்தார்கள். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் எமது ஆட்சியில் தான் அபிவிருத்தியடைந்தது.

தேர்தல் கால பிரசாரமாக அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை பயன்படுத்துவதை அரசியல் தரப்பினர் தவிர்த்துக்கொள்ள வேண்டும். 13ஆவது திருத்தம் பற்றி அனைவரும் பேசுகிறார்கள்.

ஆனால் காலவரையறையின்றி, பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல் பற்றி எவரும் பேசுவதில்லை. மாகாண சபைத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளதால் தமிழர்களின் அரசியல் உரிமை பறிக்கப்பட்டுள்ளது என்பதை தமிழ் அரசியல் தலைமைகள் அறியவில்லையா?

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தால் கட்சி என்ற ரீதியில் அதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் - என்றார். (அ)

## யாழ்...

செல்லும் வகையில் யாழ்ப்பாணம் கோட்டை சுற்றுவட்டப் பகுதியை சுற்றி சிலைகள் அமைக்க நடவடிக்கை எடுப்பதுடன் சிலைக்கு உரியவர்களின் கனவுகளையும் வென்றெடுப்பேன் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்

அமைச்சரின் யாழ்ப்பாணம் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் - எம்மிடையே இருக்கும் தேசிய நல்லிணக்கமும் அதனூடான அணுகு முறைகளும் மட்டுமல்லாது எமது தற்துணிவுமே இன்று யாழ்.மாவட்டத்தில் எமது இனத்தின் வரலாற்றை சொல்லும் மன்னர்கள் பலரது சிலைகளும் வரலாற்று சான்றுகளும் கட்டடங்களும் நிறுவப்பட்டிருப்பதற்கு காரணமாக இருக்கின்றது.

குறிப்பாக தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடிய தமிழ் தலைவர்கள், போராளிகள், மக்கள் எனப் பலரும் நினைவுகூரப்பட வேண்டியவர்களாக உள்ளனர். அத்துடன் அவர்களது கனவுகளும் நிறைவேற வேண்டும்.

அதேபோன்று அவர்களை நினைவுகூருவதற்கான ஏற்பாடுகளும் குறிப்பாக அவர்களது நினைவுச் சிலைகள் நிறுவப்படுவது அவசியமாகும். இதில் கட்சி பேதங்களோ இயக்க வேற்றுமைகளோ இருக்கப்போவதில்லை.

ஏற்கனவே யாழ். மணிக்கூட்டு கோபுர சுற்றுவட்டத்திலுள்ள மன்னர்களது சிலைகள், முத்திரைச் சந்தியிலுள்ள சங்கிலியன் சிலை, யாழ்.மடத்தடியிலுள்ள தனிநாயகம் அடிகளார் சிலை போன்றனவும் எமது அணுகுமுறையால் தடைகளை தகர்த்து நிறுவப்பட்டுள்ளன.

இவற்றினூடாகவே எமது மக்களின் இருப்புக்கள் மற்றும் வரலாறுகள் அடுத்த சந்ததிக்கு உண்மைத்தன்மையுடன் எடுத்துச் செல்லப்படுவதற்கான வழிமுறையாக அமையும் என நினைக்கின்றேன்.

அதனடிப்படையில் தமிழ் மக்களின் தேசிய தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் உள்ளிட்ட நினைவு கூரப்பட வேண்டிய தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடிய தமிழ் தலை வர்கள், போராளிகள், மக்கள் எனப் பலரும் உள்ளனர். அவர்களது நினை வேந்தல்களை இயக்க வேறுபாடுகள் இன்றி, சிலைகளை அமைத்து அவர்கள் அனைவரையும் வரலாற்றில் நிலை நிறுத்த எதிர்பார்ப்பார்த்துள்ளனர் - என்றார். (அ)

# கடலில் தவறி விழுந்த மருத்துவர் பலி!

கொழும்பு,ஜூன்16

உகந்தை மலை முருகன் ஆலயத்தில் இருந்து வரும் வழியில் பாணமை கடலில் தவறி விழுந்த மருத்துவர் ஒருவர் நேற்று இரவு உயிரிழந்தார்.

காரைதீவை சொந்த இடமாக கொண்ட இ. தக்சிதன் என்ற மருத்துவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இவருடைய சடலம் மரண பரிசோதனைக்காக பாணமை வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை காரைதீவு மாணவன் ஒருவன் கடலில் தவறிவீழ்து உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## பூநகரி...

மின்னுற்பத்தி திட்டங்களுக்கு இலங்கை முதலீட் டுச் சபை கடந்த பெப்ரவரி 23ஆம் திகதி அனுமதி கடிதத்தை வழங்கியிருந்தது. இந்த திட்டமானது 442 மில்லியன் அமெ ரிக்க டொலர் முதலீட்டுடன் முன்னெ டுக்கப்படவுள்ள நிலையில், இதனூடாக 350 மொகாவோட் மின்சாரம் தேசிய மின்கட்டமைப்பில் இணைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் பூநகரி மற்றும் மன்னார் காற்றாலை மின்னுற்பத்தி திட்டங்களுக்கு அனுமதி வழங்குவதற்கு மேலும் பல தகவல்கள் அவசியமாக உள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

## ஐ.எம்.எவ்...

இங்குள்ள சில அரசியல் கட்சிகள் ஐ. எம். எவ். உதவி இல்லாமல் பயணிக்க முடியும் எனக் கூறுகின்றன. இந்த முட்டாள்தனமான கதையை நம்பி ஏமாற வேண்டாம் என்று 220 இலட்சம் மக்களிடமும் கேட்டுக்கொள்கிறேன். உலகப் பொருளாதார மற்றும் வர்த்தக முறைகள் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு உருவாக்கப்பட்ட சர்வதேச நிதிச் சட்ட அமைப்பை அடிப்படையாகக் கொண்டவையாகும். ஐ. எம். எவ், உலக வங்கி போன்றவற்றின் மூலம் உலகப் பொருளாதார முறைமை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியம் இல்லாமலேயே இந்தப் பயணத்தை மேற்கொள்ள முடியும் என யாராவது முட்டாள்தனமான கருத்தை முன்வைத்தால் அது உலக நகைச்சுவையாகும் என்றும் சஜித் கூறினார்.

மக்களுக்குச் சாதகமான சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையை எட்டுவதற்கான வாய்ப்புகள் இருந்தும், இன்று அவ்வாறான உடன்பாடு எட்டப்படவில்லை. மக்களின் வலிகளுக்கு முன்னுரிமை கொடுத்து ஐ. எம். எவ். ஒப்பந்தங்கள் கையெழுத்தாகவில்லை. அரசாங்கமும் ஆட்சியாளர்களும் தரையில் கால் பதிக்காமல், வானிலிருந்து கொண்டு கைச்சாத்திட்ட மக்கள் விரோத ஒப்பந்தமே தற்போதைய அரசாங்கம் இணக்கம் கண்டுள்ள ஒப்பந்தம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 237 ஆவது கட்டமாக 11 இலட்சத்து 77,000 ஆயிரம் ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், கம்பஹா, திவுலப்பிட்டிய, ஹூனுமுல்ல மகா வித்தியாலயத்துக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது, பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதியுதவியும் வழங்கப்பட்டது.

ஐ. எம். எவ். மூலம் பொருளாதார சீர்திருத்தம் மற்றும் மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படும் போது, அவை நாட்டுக்குப் பொருத்தமானதாகவும் அமைய வேண்டும். இந்த ஒப்பந்தங்கள் மனிதாபிமானமாக இருக்க வேண்டும். மனிதனைப் பாதுகாத்து வாழ வைப்பதே மனிதனின் உன்னத கடமையாகும். எட்டப்பட்டுள்ள இணக்கப்பாடுகள் மனிதனை பாதுகாக்கும் ஒன்றாக அமையவில்லை. ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் இந்த ஐ. எம். எவ். ஒப்பந்தத்தில் திருத்தங்களை மேற்கொள்வோம் என ஐ. எம். எவ். பிரதிநிதிகளிடம் வெளிப்படையாகத் தெரிவித்துள்ளோம்.

மேலும், ஐ. எம். எவ். இல்லாமலேயே வங்குரோத்தான எமது நாட்டை கட்டியெழுப்ப முடியும் என்று யாராவது சொன்னால் அது பொய்யும் மாயையுமாகும். எமது நாட்டுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவி தேவை. இதில் மக்க ளுக்கு நன்மையும் நிவாரணமும் தரக்கூடிய இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும் - என்றார். (எ)

## மொட்டு...

நம்பிக்கைக்குரிய தலைவராக ரணில் விக்கிரமசிங்கவே இருக்கின்றார் எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளராகவே ரணில் விக்கிரமசிங்க வருவார். எனவே, யானை சின்னம் மாறக்கூடும். ஐக்கிய தேசியக் கட்சி வசம் 30 லட்சம் வாக்குகள் உள்ளன. அந்த எண்ணிக்கையில் இருந்துதான் வாக்கு வேட்டை ஆரம்பமாகும். பொதுஜன பெரமுன கட்சிக்குரிய 69 லட்சம் வாக்குகளில் 39 லட்சம் கிடைத்தாலேயே ரணிலின் வெற்றி உறுதியாகிவிடும் - என்றார். (அ)

## வெடிக்காத...

அப்பகுதிக்கு சென்ற பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். இன்று நீதிமன்றின் அனு மதியுடன் பாதுகாப்பாக அகற்றி செயலிழக்கச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனையிறவு பகுதியில் பல வருடங்களுக்கு மேலாக யுத்தம் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்தது. இதன்போது எறியப்பட்ட ஏறிகணைகள் வெடிக்காத நிலையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் மீட்கப்பட்டு செயலிழக்கும் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தப்பியோடிய...

அபேவிக்ரம வீரசிங்கவிடம் தெரிவித்தார்.

தரமற்ற மனித நரம்பு வழி இம்யூனோகுளோபுலின் கொள்வனவு தொடர்பான வழக்கில் ஒன்பதாவது சந்தேகநபரான வைத்திய நிபுணர் புத்பிட்டியவிற்கு சர்வதேச பொலிஸ் ஊடாக சிவப்பு அறிவித்தல் விடுக்கப் பட்டிருந்தது.

சந்தேக நபரை சர்வதேச பொலிசார் கைது செய்து குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் சர்வதேச பிரிவினரிடம் ஒப்படைக்கவுள்ளதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கில் 12வது சந்தேக நபரான முன்னாள் தேசிய மருத்துவ ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைமை நிர்வாக அதிகாரி விஜித் குணசேகரவிடம் இருந்து 12 அரசாங்க முத்திரைகளை கண்டுபிடிப்பதில் புலனாய்வாளர்கள் வெற்றி பெற்றுள்ளதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

தன்னிடம் இரண்டு அரசாங்க முத்திரைகள் மட்டுமே இருப்பதாக குணசேகர முன்னதாக வாக்குமூலம் அளித்திருந்தார்.

சந்தேகத்திற்கிடமான ஆவணங்கள் தொடர்பில் விசாரணை நடத்திய அரசாங்க தடயவியல் நிபுணருக்கு இந்த முத்திரைகள் தொடர்பில் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

தரமற்ற மனித இம்யூனோகுளோபுலின் கொள்வனவு தொடர்பான வழக்கு நேற்று மாளிகாகந்தை நீதவான் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெலிய ரம்புக்வெல்ல, முன்னாள் சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக சந்திரகுப்த உள்ளிட்ட 11 சந்தேக நபர்கள் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஜனாதிபதி தேர்தல் குறித்து மு.கா. இன்னும் முடிவில்லை

கொழும்பு, ஜூன்

ஜனாதிபதி தேர்தலின்போது எந்த வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்பது தொடர்பில் கட்சி இன்னும் இறுதியான - உறுதியான முடிவை எடுக்கவில்லை என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைத்துள்ளோம். அந்த அணியுடன் பயணிக்கவே எதிர்பார்க்கின்றோம். தற்போதைய சூழ்நிலையில் சஜித் பிரேமதாசவை ஆதரிக்கும் முடிவிலேயே இருக்கின்றோம். எனினும், கட்சி மாற்று முடிவை எடுத்தால் அது பற்றியும் பரிசிலீக்க வேண்டிவரும்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் ஜனாதிபதியின் ரணிலின் சகாக்கள் அறிவிப்புகளை விடுத்திருந்தாலும், ரணில் விக்கிரமசிங்க இன்னும் அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை. அந்த அறிவிப்பை ரணில் விக்கிரமசிங்க விடுக்கும்வரை நம்ப முடியாது.

தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியே வெற்றிபெறும் என்ற அதிக நம்பிக்கை உள்ளது - என்றார். (அ)

# மகிந்த பாதுகாத்த நாட்டை காட்டிக்கொடுக்கவேண்டாம்

## கோருகிறது பொதுஜன பெரமுன

கொழும்பு, ஜூன் 16

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை ரணசிங்க பிரேமதாச ஆதரித்தாரா என்பது தொடர்பில் எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெளிவுபடுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய ஏற்பாட்டாளர் ரோஹித அபே குணவர்தன.

"காணி, பொலிஸ் அதிகாரம் தொடர்பில் சஜித் பிரேமதாசவின் நிலைப்பாடு என்ன? பொலிஸ் அதிகாரத்தை வழங்கினால் மாகாணங்களிலும் பொலிஸ்மா அதிபர்கள் செயற்படக்கூடும்.

நாட்டு மக்கள் தற்போது போரின்றி வாழ்கின்றனர். எனவே, மஹிந்தவும், படையினரும் பாதுகாத்த நாட்டை காட்டிக்கொடுக்க வேண்டாம். ." - எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# முல்லைத்தீவில் தீவிரமாகும் சட்டவிரோத மணல் அகழ்வு!

## கண்டுகொள்ளாத அதிகாரிகள்

முல்லைத்தீவு, ஜூன் 16

முல்லைத்தீவு விஸ்வமடு நெத்திலி ஆறு பகுதியில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் பல விவசாயிகளின் வயல் நிலங்களில் இரவு,பகலாக தொடர்ச்சியாக காணி உரிமையாளரின் அனுமதி இன்றி சட்டவிரோதமான முறையில் உழவு இயந்திரங்களின் மூலம் மணல் அகழ்வு இடம்பெறுவதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக புதுக்குடியிருப்பு பொலிஸார் மற்றும் கனியவளப் பிரிவினர் மற்றும் பொது அமைப்புகள் எவருமே இவ்விடயம் தொடர்பாக கண்டுகொள்வதில்லை எனவும் இதன் காரணமாக அப்பாவி விவசாயிகள் பல வழிகளிலும் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், நெற்செய்கை மேற்கொள்ளும் பொழுது காட்டு யானையின் தொல்லை ஒவ்வொரு வருடமும் இடம்பெறுவதாகவும், வயல் அறுவடை முடிந்ததும் மணல் கொள்ளை இடம்பெறுவதாகவும் இதனால், பாரிய அளவில் வயல் நிலங்கள் சீர் செய்வதற்கான பணச் செலவு ஏற்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையங்களிலோ அல்லது வேறு எவரிடமும் முறைப்பாடு செய்ய முடியாத நிலையில் மணல் கொள்ளையர்களினால் அச்சுறுத்தலாக இருப்பதாகவும் தனிமையில் தமது வயல் பகுதிகளுக்கு பார்வையிடுவதற்கு செல்ல முடியாத அச்ச நிலை தோற்றியுள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே, இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக உரிய தீர்வுகளை பெற்று விவசாய நிலங்களில் மணல் அகழ்வை தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# துணிச்சலுடன் நாட்டை பொறுப்பெடுத்து நெருக்கடிகளைச் சமாளித்தவர் ரணில்

## சொல்கிறார் நஷீர் அஹமட்

சிலாபம், ஜூன் 16

நாடு பொருளாதார ரீதியில் பாரிய நெருக்கடியை எதிர்கொண்டிருந்த நிலையில், நாட்டை துணிச்சலுடன் பொறுப்பெடுத்து பொருளாதார நெருக்கடிகளைச் சமாளித்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டும்தான் என்றும் வடமேல் மாகாணத்தின் அபிவிருத்திக்கு ஜனாதிபதி பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளார் எனவும் அந்த மாகாண ஆளுநர் நஷீர் அஹமட் தெரிவித்தார்.

சிலாபம் கிரிமெட்டியான பௌத்த பாலிகா தேசிய பாடசாலையில் மூன்று மாடிக் கட்டடமொன்றை திறந்து வைக்கும் நிகழ்வு முன்தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நஷீர் அஹமட் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

வடமேல் மாகாணத்தின் ஆசிரியர் பற்றாக்குறையை நாங்கள் பெருமளவில் நீக்கியுள்ளோம். சுமார் 4200 ஆசிரியர் நியமனங்களை நாங்கள் கட்டம் கட்டமாக வழங்கியுள்ளோம்.

அத்துடன் அந்தந்த மாவட்டங்களில் உள்ளவர்களை மாவட்டத்துக்கு உள்ளேயே நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.


வடமேல் மாகாணத்தின் கல்வி மற்றும் ஏனைய துறைகளில் பெரும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.


இவ்வாறான செயல்பாடுகளுக்கு ஜனாதிபதி பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளார். அதற்காக வடமேல் மாகாண மக்கள் சார்பில் நான் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாடு பொருளாதார ரீதியில் பாரிய நெருக்கடியை எதிர்கொண்டிருந்த நிலையில், துணிச்சலுடன் நாட்டைப் பொறுப்பெடுத்து பொருளாதார நெருக்கடிகளைச் சமாளித்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டும்தான்.

அந்த வகையில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் எமது ஜனாதிபதி பாராட்டப்படுகின்றார் என்றும் நஷீர் அஹமட் தெரிவித்தார். (எ)

# மயிலை வேட்டையாடி உட்கொண்டவர்களை ஒரு வருடத்தின் பின்னர் தேடும் பொலிஸார்





கொழும்பு, ஜூன் 16

மயிலை வேட்டையாடி உண்ட வெளிநாட்டவர் உள்ளிட்ட வேடுவ சமூகத்தைச் சேர்ந்த 6 பேரைத் தேடி பொலிஸார் தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ளனர்.

மாதுரு ஓயா தேசிய பூங்காவுக்குள் மயிலொன்றை வேட்டையாடி அதன் இறைச்சியை சமைத்து உட்கொண்ட வேடுவர் சமூகத்தைச் சேர்ந்த ஐவர் மற்றும் வெளிநாட்டவர் ஒருவர் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2019 அல்லது 2020 ஆம் ஆண்டு நடந்த இந்தச் சம்பவம் காணொலியாக பதிவு செய்யப்பட்டு ஒரு வருடத்துக்கு முன்பு சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இந்தக் காணொலியை 80 இலட்சம் பேர் பார்வையிட்டுள்ளதோடு, பொது மக்கள் சம்பவம் குறித்து கருத்துக்களை வெளியிட்டதை தொடர்ந்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சம்பவம் குறித்து ஹெனானிகல வனவிலங்கு தள பாதுகாப்பு அதிகாரி குமாரசிறி விஜேகோன் மஹியங்கனை நீதிவான் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

இலங்கையில் பாதுகாக்கப்பட்ட இனமாக அறிவிக்கப்பட்டுள்ள மயில், வில் மற்றும் அம்பு பயன்படுத்தப்பட்டு வேட்டையாடப்பட்டுள்ளது.

ஆதிவாசிகளான வேடுவர் சமூகத்தின் பாரம்பரிய முறைப்படி வேட்டையாடப்பட்ட மயில் வறுக்கப்பட்டு தேனில் தோய்த்து உட்கொண்ட காட்சி காணொலியில் பதிவாகியுள்ளது. (எ)

# கிளிநொச்சி உணவகங்கள் மீது சுகாதார பகுதியினர் பாய்ச்சல்!

கிளிநொச்சி, ஜூன் 16

கிளிநொச்சியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய 4 உணவகங்களுக்கு எதிராக பொது சுகாதார பரிசோதகர்களால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அண்டிய பகுதியில் உள்ள உணவகங்களில் சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் சோதனையின்போதே சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய 4 உணவங்கள் அடையாளம் காணப்பட்டன.

குறித்த உணவகங்களில், மக்கள் பாவனைக்கு பயன்படுத்த முடியாத நிலையில் உணவுப் பொருட்கள் காணப்பட்டதுடன், குறித்த உணவங்களுக்கு எதிராக கிளிநொச்சி நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் நான்கு உணவக உரிமையாளர்களுக்கும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

அதேவளை, இரண்டு உணவகங்கள் தற்காலிகமாக மூடப்பட்டு சுகாதார பரிசோதகரின் பரிசீலனையின் பின்னர் மீண்டும் உணவகங்கங்களை திறக்க அனுமதிக்கப்படுமென சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

# ரணிலை ஆதரிக்கும் பிரசாரம் ஜூன் 30 மாத்தறையில் ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 16

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து தற்போதைய அரசால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களை மக்கள் மயப்படுத்துவதற்காக விசேட மக்கள் சந்திப்புகளை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் முதலாவது கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி மாத்தறை யில் நடைபெறவுள்ளது. இதற்குரிய ஏற்பாடுகளை அமைச்சர் காஞ்சன விஜேசேகர முன்னெடுக்கவுள்ளார்.

இன்று இந்தக் கூட்டத்தை நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், மாத்தறையில் ஏற்பட்ட வெள்ள நிலையால் 30 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

அதன்பின்னர் ஏனைய மாவட்டங்களிலும் அரசின் வேலைத்திட்டங்களை முன்வைத்து, அதன்மூலம் வாக்கு வேட்டை நடத்தும் பிரசாரம் ஆரம்பமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.